விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 11 சனிக்கிழமை (24.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 126

## முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி

### யாழ்.பல்கலையில் திறப்பு



19

## அத்தியாவசிய தேவைகளுக்காக இருவர் மட்டும் வெளியே வருவதற்கு அனுமதி

### இறுக்கமான புதிய சுகாதார கட்டுப்பாடுகள் வெளியீடு

(கொழும்பு)

நாட்டில் கோவிட் - 19 வைரஸைக் கட்டுப்படுத்தும் வகையில் பொது நடவடிக்கைகள் குறித்து சுகாதார அமைச்சு புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

நாட்டில் கோவிட் - 19 இன் நிலை அவ்வப்போது மாற்றத்திற்கு உட்பட்டது மற்றும் அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகளின் நிலை மாறுபடும் மற்றும் இந்த நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்க்ளின் எண்ணிக்கை மாற வேண்டும் என்று 19

## புலிகளின் பெயரில் அடையாள அட்டை தயாரித்த நபர் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியாவில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் நபரொருவர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட் 19

## பாரதத்தில் கொரோனா உக்கிர தாண்டவம்

### ஒவ்வொரு நாளும் 3 இலட்சம் புதிய தொற்றாளர்கள்

(கொழும்பு)

இந்தியாவில் கொரோனா தொற்றின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரு 19

## சாவகச்சேரியில் குடும்பஸ்தரை வழிமறித்து சங்கிலி அபகரிப்பு

(கரணவாய்)

புலோலி - சாவகச்சேரி வீதியிலுள்ள கப்பூது பகுதியில் வீதியால் சென்ற குடும்பஸ்தரை வழிமறித்த கொள்ளையர்கள் 19

## நாட்டை முடக்கும் தீர்மானம் இல்லை

# கொரோனா அதிகமாகும்

# பகுதி தனிமைப்படுத்தப்படும்

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



- பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கும் தீர்மானம் இல்லை.
- வார இறுதி நாட்களில் வீடுகளிலேயே இருங்கள்.
- எதிர்வரும் 3 வாரங்கள் ஆபத்தானவை.
- உச்சபட்ச எச்சரிக்கை தேவை.

"நாங்கள் ஒரு நீண்ட வார இறுதியில் வருகிறோம். நாடு பூட்டப்படுமா? அல்லது பிற சட்டங்கள் இயற்றப்படுமா என்று எல்லோரும் கேட்கிறார்கள். தற்போது எங்களுக்கு அத்தகைய நம்பிக்கை இல்லை என்று இராணுவத் தளபதி தெரிவித்தார். 03

## நாடு தற்போது அபாய நிலையில்

### அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)

நாட்டில் கொவிட் அச்சுறுத்தல் மீண்டும் ஏற்பட்டுள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்த மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

போக்குவரத்து 19

## யாழ்ப்பாணத்தில் மேலும் 12 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 12 பேருக்கு கொரோனா தொற்றுஉள்ளமை நேற்று வெள்ளிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய 19

## இலங்கையில் காற்றில் பரவும் புதிய வகை கொரோனா

### அதிகம் இளம் வயதினரைத் தாக்குகின்றது

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தன

(கொழும்பு)

இலங்கையில் அண்மைக் காலங்களில் அதிகளவான இளம் வயதினர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டு வருவ 19

### நாடு முழுவதும் பாடசாலைகளை

## மூன்று வாரங்களுக்கு மூடுவதற்கு ஆராய்கின்றோம்

### இராஜாங்க அமைச்சர் சுதர்சினி

(கொழும்பு)

நாடு முழுவதும் பாடசாலைகளை முடக்குமாறு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக ஆரம்ப சுகாதாரம் மற்றும் தொற்றுநோய், 19

## இன்னொரு பிரபாகரனை உருவாக்க அரசு முயற்சிக்கிறதா?

### சஜித் கேள்வி

3ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் நேற்று +931 தொற்றாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் மேலும் +931 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் ஏற்கெனவே கொரோனா தொற்றுக்கு உள்ளான 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் பெண்ணை வழிமறித்து மோ. சைக்கிளுக்கு தீ வைப்பு

## ஆனைக்கோட்டையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் ஹாட்வெயார் ஒன்றில் பணியாற்றும் இளம் பெண்ணின் மோட்டார் ஸைக்கிள், கும்பல் ஒன்றினால் எரியூட்டப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை பகுதியில் வைத்து இந்தச் சம்பவம் நேற்று மாலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டையைச் சேர்ந்த 24 வயதுடைய இளம்பெண்வேலை முடித்து வீடு திரும்பிய போது பின் தொடர்ந்து சென்ற மூவர் அடங்கிய கும்பல் அவரை வழி மறித்து தடுத்துள்ளது.

அவர்களிடமிருந்து தப்பிக்க மோட்டார் சைக்கிளை வீதியில் கைவிட்டு வீடொன்றுக்குள் இளம் பெண் சென்ற போதே மோட்டார் சைக்கிளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ம-03,33)

# நாட்டில் பரவும் திரிபடைந்த வைரஸ் 14 நாட்களுக்கு பிறகே நோய் அறிகுறி காட்டுகின்றது

## அவதானமாக இருக்குமாறு சுகாதார அமைச்சர் நாட்டு மக்களிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் தற்போது பரவி வரும் திரிபடைந்த வைரஸ் 14 நாட்களுக்கு பிறகே நோய் அறி குறி காட்டுவதனால் நாட்டு மக்கள் அவதானமாக இருக்குமாறு சுகாதார அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோவிட் 19 தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்காக நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் தினங்களில் மத வைபவங்கள் இடம்பெறவுள்ளன. புத்தாண்டு வைபவங்களையும் நடத்துவதற்கு சிலர் திட்டமிட்டுள்ளனர். இந்த தீர்மானமிக்க சந்தர்ப்பத்தில் இந்த அனைத்தையும் நிறுத்துமாறு கேட்டுக்கொள்வதாக அமைச்சர் தெரிவித்தார்.

தற்பொழுது நாட்டில் காணப்படும் கோவிட் 19 வைரஸ் புதிய திரிபு ஆகும். இது முன்னைய வைரசிலும் பார்க்க மாற்றத்தைக் கொண்டதாகும். சுனாமியைப் போன்று வேகமாக தற்பொழுது இந்தியா போன்ற நாடுகளில் பரவி வருகின்றது. இது எந்த வகை வைரஸ் தொற்று என்று ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த வைரஸ் தொற்றினால் பாதிக்கப்படுவோருக்கு 14 நாட்களுக்கு பிறகே நோய் அறிகுறிகள் தென்படுகின்றன.

1 ஆவது, 2 ஆவது வைரஸ் தொற்று அலையின் போது நாட்டு மக்கள் அதனை பொறுப்புடன் செயற்பட்டு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினர். இதேபோன்று தற்போது நெருக்கடியான தொற்றுக்கு மத்தியில் பொதுமக்கள் தமது பொறுப்பை உரிய வகையில் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தாம் கரம் கூப்பி மக்களிடம் கேட்டுக் கொள்வதாகவும் சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித் தார். (ம-03)

## மும்பையை பஞ்சராக்கியது பஞ்சாப்



மும்பை 131/6 (20 ஓவர்)
ரோகித் சர்மா 63
பொலார்ட் 35
பஞ்சாப் 132/1 (17.1 ஓவர்கள்)
ராகுல் 60
கெயில் 43
பஞ்சாப் 9 விக்கெட்டுக்களால் வெற்றி
ஆட்ட நாயகன் ராகுல்


## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **பீற்றர் லோகேஸ் பிரசாந்தன்** அவர்களின் பாசமிகு தந்தை

அமரர்

**சந்தியாப்பிள்ளை பீற்றர் கிறிஸ்ரோலோகஸ்**

அவர்கள் கடந்த 12.03.2021 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று மறைவுற்றதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயகம், நல்லூர்.**

(C-2031)

## நல்லூர் கந்தன் திருமண சேவை

எம்மிடம் எல்லா இனத்தவர்களுக்குமான வரன்கள் உள்நாடு, வெளிநாடு, அரச உத்தியோகம், அரச சார்பற்றவர்கள் உட்பட எல்லாவித மணமக்களும் எம்மிடம் உண்டு. எல்லா மணமகள், மணமகனாயினும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு (6691)
**நல்லூர் கந்தன் திருமண சேவை**
வி. ஜெயந்தி **077 973 3183**

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (6498)

☎-070 640 5951
e-mail : engchelvam@gmail.com

## மணமகன் தேவை

95, 6 இல் சூரியன் செவ்வாய், உத்தரம் 1, பட்டதாரி மணமகள், அரச தொழில், வெளிநாட்டு மணமகன் தேவை.
**துர்க்கா திருமண சேவை** (6690)
**077 818 5978**

## 58 ஆவது அகவை தின வாழ்த்துக்கள்



சைவ சித்தாந்த பண்டிதர்
**சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்**
( B.A, Dip in Edu., M.A )
( ஆதீன கர்த்தா, பிரதம குரு தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில் மற்றும் இலட்சுமணன் தோட்டம், வீரமாகாளியம்மன், வட பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் )

மங்களஞ்சேர் செந்தமிழை ஆய்ந்து கற்றாய் மாண்புடைய வடமொழியாம்
கலை ஞானத்தால் வீங்கு புகழ் வல்லுனனென்றுலக மேந்தும் வித்தகனாம்
சோமையா நல்ளோய் வாழி ! நீங்கரிய நற்குணமே பண்பாய் கொண்டாய்
நாமெல்லாம் செய்நன்றி மறப்போமல்லோம் பாங்குடைய பத்திரகாளிதாள்
பணிகின்றோம் உன் நாமம் வாழி நீ பல்லாண்டு மல்கி வாழி!

இங்ஙனம் :
தும்பளை மேற்கு வில்வளை பிரத்தியங்கிரா மாகாளியம்மன் தேவஸ்தானம் அடித் தொண்டனும் அன்பனும் சிவத்திரு தம்பு இராமசந்திரன் அவர்கள்

**தும்பளை, பருத்தித்துறை**
**077 620 2716**
(C-2029)

## அகவை தின வாழ்த்துக்கள்




சைவ சித்தாந்த பண்டிதர்
**சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்**
(ஆதீன ஹர்த்தா, தும்பளை நெல்லண்டை பத்திரகாளியம்மன் இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீவீரமாகாளி அம்மன் வடபத்திரகாளியம்மன் தேவஸ்தானம்)

தன்னுடைய இல்லத்தில் மனைமக்களுடன் தனது (58) ஆவது பிறந்தநாள் கொண்டாடும் எமது அன்பனை, நண்பனை வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். எமது நிரந்தரத்தாய் வல்வை முத்துமாரியம்மன் திருவருள் நிறைய வாழ்த்துக்கள் வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

*இங்ஙனம்:* **சிவஸ்ரீ. சோமாஸ்கந்த.தண்டபாணிக தேசிகர்**
**அனைத்துலக இந்து மத குரு பீடாதிபதி,**
**பிரதம குரு. வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், வல்வெட்டித்துறை.**
**தொ.பே- 077 620 2716**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு பிரபாகரனை உருவாக்க அரசு முயற்சிக்கிறதா?-சஜித் கேள்வி

(கொழும்பு)

**ஒருவரின் பிரஜா உரிமையை இல்லாமல் ஆக்குவதன் மூலம் அவரின் அரசியல் நடவடிக்கையை நிறுத்த முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் உட்பட எதிர்க்கட்சியிலுள்ள பல உறுப்பினர்களின் பிரஜா உரிமையை இல்லாமலாக்கி அரசியல் பழிவாங்கும் திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.



ஆனால் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க எந்த முயற்சியையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது விமர்சித்துள்ளார். இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மூலம் அரசாங்கம் தனது அரசியல் விரோதிகளை இல்லாமலாக்க திட்டமிட்டிருப்பது தெளிவாகின்றது. அரச தலைவர் கோட்டாபய ஹிட்லர் போன்று செயற்படவேண்டும் என அரசாங்கத்தில் இருக்கும் சிலர் தெரிவிக்கின்றனர். ஹிட்லர் அன்று ஒரு இரவில் தனது அரசியல் விரோதிகள் அனைவரையும் இல்லாமலாக்கி இருந்தார். அதேபோன்று இந்த அரசாங்கம் ஒரு அறிக்கை மூலம் தனது அரசியல் விரோதிகளை இல்லாமலாக்க திட்டமிட்டிருக்கின்றது.

மேலும் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய எதிர்க்கட்சி தலைவர் ஒருவரின் பிரஜா உரிமையை இல்லாமலாக்கப் போவதாகத் தெரியவருகின்றது. எதிர்க்கட்சியில் இருக்கும் ஒரு தலைவர் தான் அநுரகுமார திஸாநாயக்க. அவரின் பிரஜா உரிமையை இல்லாமலாக்கி அவரது அரசியல் நடவடிக்கையை நிறுத்த முடியாது. அதேபோன்று ஆர்.சம்பந்தனின் பிரஜா உரிமையை இல்லாமலாக்கி வடக்கு மக்களுக்கு அரசாங்கம் எதை சொல்லப் போகின்றது.

ஜனநாயக முறை சரியில்லை, மீண்டும் ஒரு பிரபாகரனை உருவாக்கப்போகின்றீர்களா?

இந்த அரசாங்கம் அதிகாரத்துக்கு வருவதற்கு வழிசமைத்தமைக்காக இவர்கள் சஹ்ரானை கொண்டாடினார்கள். மேலும் ஏப்ரல் தாக்குதலின் சூத்திரதாரிகளை கண்டுபிடிக்க கடும் முயற்சியுடன் செயற்பட்ட பொலிஸ் அதிகாரி ஷானி அபேசேகரவுக்கு இந்த அரசாங்கம் தண்டனை வழங்கி இருக்கின்றது. அரச அதிகாரிகளை இவ்வாறு செயற்படுத்தும்போது காவல் அதிகாரிகள் எவ்வாறு நேர்மையாக செயற்படமுடியும்? எனவும் கேள்வியெழுப்பியுள்ளார். (நி-4)

# வீடு திருத்தம் செய்து தருவதாகக்கூறி ஏமாற்றியவருக்கு எதிராக வழக்கு

(நெளுக்குளம்)

வவுனியா திருநாவற்குளம் பகுதியிலுள்ள ஒருவரின் வீடு திருத்தம் செய்து தருவதாக தெரிவித்து இரண்டு இலட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டு மூன்று மாதங்களாக ஏமாற்றி வருவதாகவும் தன்னிடம் பெற்றுக்கொண்ட பணத்தை திருப்பித்தருமாறு கோரி வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் தனது வீடு திருத்தம் செய்து தருவதாகத் தெரிவித்து தன்னிடம் இரண்டு இலட்சம் ரூபாவினைப் பெற்றுக்கொண்டு மூன்று மாதங்களாகியும் வீடு திருத்தம் செய்து தரவில்லை. பெற்றுக்கொண்ட பணத்தையும் திருப்பித்தரவில்லை. மூன்று மாதங்களாக என்னை ஏமாற்றி வருகின்றார். எனவே என்னிடம் பெற்றுக்கொண்ட பணத்தை திருப்பித்தர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முறைப்பாட்டாளர் தெரிவித்தார். (5-4-299)

# இந்தியாவில் பரவும் கொரோனா இலங்கையில் பரவினால் எதிர்கொள்வது மிகவும் கடினம்-சஞ்சய் பெரேரா

(கொழும்பு)

இந்தியாவில் பரவிவரும் நிலைமாற்றமடைந்த கொரோனா வைரஸ் இலங்கையில் பரவத் தொடங்கினால் அதனை எதிர்கொள்வது மிகவும் கடினமாகும். இந்நிலையில் பிரதேச எல்லைக்கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன் நாடளாவிய ரீதியில் பாடசாலைகள் மூடப்பட வேண்டும்.

இல்லாவிட்டால் நாட்டின் சுகாதாரத்துறை முழுமையாகச் சீர்குலையும் நிலையேற்படும் என்று ஆரம்ப சுகாதார சேவைகள் தொற்றுநோய்கள் மற்றும் கொவிட் நோய்க்கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின் ஆலோசகர் சஞ்சய் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (நி-4)



பளை மத்திய கல்லூரியில் நேற்று சிவன் ஆலயம் பிரதிஷ்டை செய்து அதற்கான கும்பாபிஷேகம் நடைபெற்றது.

(படம்:-யதுபாஸ்கரன், தேவானந்தன்)

# நிதி நெருக்கடியையும் பூகோள அரசியல் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள நேரிடும்

## மங்கள சமரவீர எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பு துறைமுகநகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் தற்போதைய வடிவத்திலேயே நிறைவேற்றப்பட்டால், பூகோள அரசியல் ரீதியான அச்சுறுத்தல்களை இலங்கை எதிர்கொள்ள நேரிடும் என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர எச்சரித்துள்ளார்.

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுகநகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் பல்வேறு தரப்பினராலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், இதுகுறித்து மங்கள சமரவீர அவரது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்துள்ளார்.

அப்பதிவில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

கொழும்பு துறைமுகநகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் தற்போதைய வடிவத்திலேயே பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமாக இருந்தால் கடன் நிதிநெருக்கடிகளையும் பூகோள அரசியல் ரீதியான அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டியேற்படலாம்.

அதுமாத்திரமன்றி நிதி ரீதியான மோசடிகள் இடம்பெறுவதற்கான ஒரு மத்திய நிலையமாக கொழும்பு மாற்றமடையும். அதற்குப் பதிலாக உண்மையிலேயே நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமான முன்னேற்றமடைந்த பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளின் முதலீடுகளை இழக்க வேண்டிய நிலையேற்படும் என்று குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# ஊழல் நிரூபிக்கப்பட்டால் பதவி துறப்பேன் -பந்துல

(கொழும்பு)

சதொச உட்பட சுப்பர்மார்கட்களில் புத்தாண்டு காலப் பகுதியில் மக்களுக்கு பெற்றுக்கொடுத்த சலுகை பொதிகளில் ஊழல் - மோசடிகள் இடம்பெற்றிருப்பதாக நிரூபிக்கப்பட்டால் அமைச்சுப் பதவியை ஒரு மணித்தியாலத்தில் துறப்பேன் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அமைச்சின் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி-4)

# நாட்டை முடக்கும் தீர்மானம் எதுவுமில்லை-சவேந்திர சில்வா

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துவரும் நிலையில் நாட்டை முடக்கும் தீர்மானம் எதுவும் இல்லையென இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வார இறுதி நாட்களில் எந்த நிகழ்வுகளையும் நடத்த வேண்டாமெனவும் பொதுமக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்குமாறும் அவர் கோரியுள்ளார்.

இதுதொடர்பாக கொழும்பில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே இராணுவத் தளபதி இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சித்திரைப் புத்தாண்டு காலத்தில் மக்கள் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில், சுகாதார விதிமுறைகளை ஒழுங்காகக் கடைப்பிடிக்காமையே தொற்று அதிகரிப்பதற்கான காரணமென சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (நி-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலி, படிக்கல் அதிரடி; ராஜஸ்தானை வீழ்த்தி மீண்டும் முதலிடத்தை பெற்றது பெங்களூர்



மும்பை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 177 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சிவம் டுபே 46 ஓட்டங்களையும் ராகுல் டிவெட்டியா 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பெங்களூர் அணியின் பந்து வீச்சில், சிராஜ் மற்றும் ஹர்சல் பட்டேல் 3 விக்கெட்டுகளையும் ஜேமீசன், கேன் ரிச்சட்சன் மற்றும் வொஷிங்டன் சுந்தர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 178 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பெங்களூர் அணி 16.3 ஓவர்கள் நிறைவில் எவ்வித விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை கடந்தது. இதனால் அந்த அணி 10 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியானது ஐ.பி. எல். வரலாற்றில் சேஸிங்கில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்த மூன்றாவது சந்தர்ப்பமாகும்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக தேவ்தத் படிக்கல் தெரிவு செய்யப்பட்டார். (4-8)

## ஐ.பி.எல். போட்டியில் இருந்து நடராஜன் விலகல்



ஐ.பி.எல்.கிரிக்கெட்டில் ஐதராபாத் சன்ரைசர்ஸ் அணியில் இடம்பிடித்திருந்த தமிழகத்தை சேர்ந்த இடக்கை வேகப்பந்து வீச்சாளர் டி.நடராஜன் கால்முட்டி காயத்தால் அவதிப்பட்டு வருகிறார்.

இதனால் முதல் 2 ஆட்டத்தில் களம் இறங்கிய அவர் அதன் பிறகு விளையாடவில்லை. இந்த நிலையில் ஐ.பி.எல்.எஞ்சிய போட்டிகளில் இருந்து அவர் விலகி இருப்பதாக ஐதராபாத் அணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஆண்டு "யார்க்கர்" பந்து வீச்சில் கலக்கிய நடராஜனுக்கு இந்த சீசன் மிகுந்த ஏமாற்றமாக அமைந்துள்ளது. (4-8)

## F.A கிண்ணத்திற்கான கால்பந்தாட்ட போட்டி இன்று

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் F.A. கிண்ணத்திற்கான வடமாராட்சி அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இன்று சனிக்கிழமையும் நாளையும் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக மற்றும் குஞ்சர்கடை கொலின்ஸ்விளையாட்டுக்கழக மைதானங்களில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் பா.முகுந்தன் அறிவித்துள்ளார்.

முதல் சுற்றுக்கான போட்டிகளில் இன்று இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் காலை 8 மணிக்கு யங்லயன்ஸ் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியும் 9.30 மணிக்கு உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து கரவெட்டி நவசக்தி அணியும் பிற்பகல் 3 மணிக்கு உடுப்பிட்டி இளைஞர் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணியும் மோதவுள்ளன.

நாளை குஞ்சர்கடை. கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் காலை 8 மணிக்கு வல்வை கருணாகரன் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணியும் 9.30 மணிக்கு கரவெட்டி சுடர்ஒளி அணியை எதிர்த்து வதிரி பொம்மேர்ஸ் அணியும் பிற்பகல் 2 மணிக்கு அண்ணாசிலையடி இளைஞர் அணியை எதிர்த்து வல்வை ஐக்கிய அணியும் பிற்பகல் 3.30 மணிக்கு கலட்டி ஐக்கிய அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா அணியும் மோதவுள்ளன. (4-6-90)

## பெண்களுக்கான கிரிக்கெட் தொடர் தீபயோதி இளைஞர் கழக அணி சம்பியன்



பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான பெண்களிற்கான கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் தீபயோதிஇளைஞர்கழக அணியை எதிர்த்து ஐக்கிய இளைஞர் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தீபயோதி இளைஞர் கழக அணி வழங்கப்பட்ட 10 பத்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பில் அகிலா 32 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் மதுஷா 3 இலக்குகளை கைப்பற்றினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஐக்கிய இளைஞர் கழக அணி 10 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 65 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர். இதனால் தீபயோதி இளைஞர் கழக அணி 3 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. அவ்வணி சார்பில் நிருஷா 28 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் அகிலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார். (4-6-90)

## இருபது-20 அணியில் இடம்பிடித்தார் யாழ்.மைந்தன் வியாஸ்காந்



இலங்கை ஜாம்பவான்கள் அணிக்கும் இலங்கை தேசிய கிரிக்கெட் அணிக்கும் இடையிலான காட்சி கிரிக்கெட் போட்டி எதிர்வரும் மே 4 ஆம் திகதி நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த காட்சி போட்டிக்கான இலங்கை இருபது-20 கிரிக்கெட் குழாமில் யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவன் விஜயகாந்த் வியாஸ்காந் பெயரிடப்பட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்று முடிந்திருந்த எல்.பி.எல். கிரிக்கெட் தொடரில் பங்கேற்று சர்வதேச வீரர்களுக்கு எதிராக சிறப்பான பந்து வீச்சு திறமையை வெளிப்படுத்தியதன் மூலம் இலங்கை தேசிய அணிசார்பில் விளையாடும் வீரர்கள் கொண்ட குழாமில் பட்டியலிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது இருப்பை தக்க வைக்கவே ஆணைக்குழுவை அமைத்தது அரசு

## சுமந்திரன் குற்றச்சாட்டு

**(கொழும்பு)**

**கோட்டாபய - மகிந்த தலைமையிலான ஸ்ரீலங்கா அரசாங்கம் தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக் குழுவை அமைத்துள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.**

இதற்கமைய, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பிரஜாவுரிமையை பறிக்க முயற்சிக்கும் அரசாங்கம், தமது வரம்பை மீறுவதற்கு முற்படுவதாக கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

இலங்கை பாராளுமன்றம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரான பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நீதித்துறையால் புறக்கணிக்கப்பட்ட ஒரு சிலரை அரசாங்கம் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களாக நியமித்திருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆணைக்குழு அரச ஊழியர்கள், அரசியல்வாதிகள், சம்பவத்துடன் தொடர்புடையவர்களிடம் வாக்கு மூலங்களைப் பெறுவதற்கு அப்பால் ஏனையோரிடம் விசாரணைகளை நடத்துவதாகவும் சுமந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.



குறித்த ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன், தன் மீது அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு சட்டத்திற்கும் நீதிக்கும் அப்பால் சென்று செயற்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (நி-4)

## பெறுகை அறிவித்தல்

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG) - 2021

1. தவிசாளர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வீதி மின் விளக்குகளை கொள்வனவு செய்வதற்கான விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.

2. தேசிய போட்டி விலைக் கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

3. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

4. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பச்சிலைப் பள்ளிபிரதேச சபை, பளை (தொலைபேசி 021 205 0037, தொலைநகல் 021 205 0036 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் மு.ப.9.00 மணியிலிருந்து பிற்பகல் 16.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர், பச்சிலைப் பள்ளி பிரதேச சபை, பளை என்னும் முகவரியில் 27.04.2021 ஆம் திகதியிலிருந்து 10.05.2021 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரையும், மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

6. விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு 10.05.2021 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

7. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள் கேள்வி கோரவோ பெறுகைக் குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

8. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலைவிபரம் | வீதி விளக்குகளின் எண்ணிக்கை | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/PSDG /06/2021 | Supplying of 50 W LED Street Light at Pachchillaipalli Predeshiya Sabah | 120Nos ±10% | 10,000.00 | 26.07.2021 |

**சுப்பிரமணியம் சுரேன்,**
**தவிசாளர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**பளை.** **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை**

(2030)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## கண்ணீர் அஞ்சலி

**தோற்றம் :- 1937.01.14 மறைவு:- 2021.04.14**

எமது பாடசாலையின் ஆசிரியர் **திருமதி. அருந்தவராசா சுலோசனா** அவர்களின் மாமனார்

**அமரர் திரு.அப்பையா சபாரத்தினம்**

அவர்கள் 14.04.2021 அன்று இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(6887)

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



எங்கள் குடும்ப குலவிளக்கு
அமரர்.திருநாவுக்கரசு கண்ணன்
தோற்றம் 04.08.1969 மறைவு:- 16.04.2019



எங்கள் குடும்ப குலவிளக்கு
அமரர்.கந்தசாமி மைனாவதி
தோற்றம் 22.03.1962 மறைவு:- 16.04.2019

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் ஆறவில்லை உங்கள் துயரம்
இடிவிழுந்த செய்தியறிந்து ஓடோடி வந்தோம்
இருப்பினும் உங்களை உயிருடன் பார்க்க முடியவில்லை
ஒவ்வொருநாளும் உங்களை நினைத்து அழுகிறோம் கலங்குகிறோம்
ஒருமுறை இவ்வையகத்துள் வந்து எங்களுடன் வாழ மாட்டீட்களோ என்று
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**...வர் வீதி,**
**...லை தெற்கு, மயிலங்காடு.** (C-2027) **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவம்

(ஏழாலை)

வண்ணைகுளக்கரை மரு ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ் தானம் நாச்சிமார் கோவில் மஹோற்சவம் கடந்த 12 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆர ம்பமாகி நடைபெற்று வரு கிறது.

இவ் உற்வசத்தில் நாளை 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திரு விழாவும் மறுநாள் திங்கட் கிழமை காலை 9 மணி க்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

ஆயைத்துக்கு வருகை தரு வோர் சுகாதார நடை முறைகளைப் பின்பற்றி வருகை தருமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.(5-4-26)



பலாலி வீதியும், பழம் வீதியும் இணையும் கந்தர்மடம் ஆலடிச் சந்தியில் சைவசமயத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமானின் திருவு ருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. உருத் திரசேனை அமைப்பால் கடந்த சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று குறித்த திருவுருவச் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

(படங்கள்- செ.ரவிசாந்)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

இளவாலை பெரிய விளானைத் தளமாகக் கொண்டு இயங்கும் சிகரம் அமையத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கி ழமை காலை 9 மணி முதல் பெரியவிளான் பொது நோக்கு மண்ட பத்தில் இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது.

மேற்படி இரத்த தான முகாமில் அனை த்துக் குருதிக் கொடை யாளர் களையும் கல ந்து கொள்ளுமாறு ஏற் பாட்டாளர்கள் வேண்டு கோள் விடுத் துள் ள னர். (5-4-18)

# இரு வேறு விபத்தில் இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மற்றும் கொடி காமம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதிகளில் கடந்த புதன் கிழமை பிற்பகல் இடம்பெற்ற வெவ்வேறு விபத்துச் சம்ப வங்களில் இரு பெண்கள் படுகாயமடைந்தனர்.

மன்னார் பகுதியைச் சேர் ந்த 64 வயது பெண்ணொ ருவர் பேரூந்தில் பயணித் துக்கொண்டிருந்த போது சாவகச்சேரி நகர் பகுதியில் திடீரென பேரூந்திற்கு குறு க்கே வந்த மோட்டார் சைக் கிளைக் காப்பாற்ற சாரதி சடுதியாக பேரூந்தை நிறுத் தியுள்ளார். இதன் போது வயோதிபப் பெண் பேரூந் தினுள் காணப்பட்ட இரும்புக் கம்பியுடன் மோதி தலையில் படுகாயமடைந்துள்ளார்.

அதேவேளையில் கொடி காமம் பகுதியில் மஞ்சள் கடவை ஊடாக வீதியைக் கடந்த 70 வயது பெண் ஒரு வரை மோட்டார் சைக்கிளில் சென்ற யுவதி மோதியதில் அவர் படுகாய மடைந் துள் ளார். விபத்தினை ஏற்படுத் திய யுவதி தப்பித்துச் சென் றிருப்பதாகத் தெரிவிக்கப்ப டுகிறது.

விபத்தில் காயமடைந்த இரு பெண்மணிகளும் சிகிச் சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளனர்.(5-6-4-30)

## மத்தியஸ்தர் சபை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செய லக பிரிவுக்கான மத்தியஸ்தர் சபையானது வழமை போன்று யாழ்ப்பாணம் சர்மார்க்க மகா வித்தியாலயத்தில் பிரதி ஞாயிற் றுக்கிழமைகளில் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடைபெறும் என மத்தி யஸ்தர் சபை தவிசாளர் அறி வித்துள்ளார். (5-4)

# கூவி அழைத்ததால் பணி நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழில் பேருந்து நடத்துநர் ஒருவர் நேற்று வழியில் குறி த்த பேருந்து பயணம் செய்யும் இடங்களைக் கூறி பயணி களை கூவியழைத்து பேருந் தில் ஏற்றினார் எனக்கூறி தனியார் போக்குவரத்து சபை இணையமானது அவரை 10 நாட்கள் பணிநீக்கம் செய்துள் ளது.

இதனால் அப் பாதைவழி தனியார் பேருந்து சாரதிகளும் நடத்துநர்களும் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட் டனர்.

இதன் காரணமாக பாட சாலை மாணவர்களும் பய ணிகளும் நேற்று பெரும் அசௌ கரியங்களை எதிர்நோக்கி னர்.

அதன் பின்னர் குறித்த பாதை வழி சங்கமானது அவரை மீண்டும் பணியில் ஈடுபடுமாறு கூறியது.

அதனையடுத்து அவர் களது வேலை நிறுத்தமானது கைவிடப்பட்டு வழமை போல செயற்பாடுகள் இடம்பெற் றன. (5-4-104)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்க ளத்தின் ஏற்பாட்டில் உல கெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக் கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்று வருகின்றன.

அந்த வகையில் நாளை 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணி க்கு பொலிகண்டி கந்தவ னம் கல்யாண வேலன் சுவாமி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளின் நிறை வில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சோ.வைத் தியநாதக் குருக்களின் அரு ளாசி உரையும் வேதபாரா யணமும் இடம்பெறவுள் ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாப னத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிச னம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலி பரப்புச் செய்யப்படும். (5-4)

# மயான வீதியைப் புனரமைக்க மக்கள் வேண்டுகோள்


(வரணி)

வரணி மாசேரி கிராம உத்தி யோகத்தர் பிரிவில் உள்ள கப் பத்தை இந்து மயான வீதியை செப்பனிட்டுத் தருமாறு அப்ப குதி மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். இவ் விடயம் தொடர் பாக அவர்கள் மேலும் தெரி விக்கையில்,

இந்த மயானமானது 1955 ஆம் ஆண்டளவில் அமைக் கப்பட்டதாகவும் கிராமத்தின் எல்லையோரமாக காட்டுப் பகு தியில் இருப் பதாகவும் குறிப் பிடுவதோடு இதற்குச் செல்லும் பாதையா னது மண்ணிட்டு அமைக்கப் பட்டுள்ளமையால் மழை காலத்தில் சேறும் சகதியு மாக காணப்படுகின்றது. அது மட்டுமன்றி வெள்ள நீர் வீதிக்கு மேலாக பாய்ந்து செல்வதால் வீதி அரிப்புக்குள்ளாகி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக இறந்த வர்களின் உடல்களை தகனம் செய்வதற்கு கொண்டு செல் லும் போது பல்வேறு இன்னல் களுக்கு முகம்கொடுக்க வேண் டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

எனவே இவ் வீதியை மழை காலம் தொடங்குவதற்கு முன் பாக புனரமைத்துத் தருமாறு மூன்று கிராம மக்களும் பிர தேச சபையினரிடம் வேண்டு கோள் விடுகின்றனர். (5-6-103)



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் சர்வதேச புவி தின நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை சுகாதார விதி முறைகளிற்கு அமைய எளிமையாக இடம்பெற்றது. "எங்கள் பூமியை மீட்டெடுங்கள்" எனும் தொனிப் பொருளில் இவ்வருட சர்வதேச புவி தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

(படம்:- ரவிசாந்)




## வில்லூன்றியில் சித்திரா பூரணை

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி புனித தீர்த்தத் தில் சித்திரா பூரணை நிகழ்வு கள் நாளை மறுதினம் திங்கட் கிழமை நடைபெறவுள்ளது. வில்லூன்றி வீரகத்தி விநாய கர் ஆலயத்தில் அதிகாலை விசேட அபிஷேக பூசைகளும் காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து காலை 8 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள் ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அடியவர்கள் அனைவரை யும் சுகாதார நடைமுறைக ளைப் பின்பற்றுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ள னர். (5-4-6)

# மோ.சைக்கிள் விபத்து; இளைஞர் படுகாயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மிருசுவில் வடக்குப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள் ளார்.

மகேந்திரா வாகனமும்- மோட்டார் சைக்கிளும் ஒன் றுடன் ஒன்று மோதியதில் இவ் விபத்துச் சம்பவித்துள்ளது.

இதில் மோட்டார் சைக்கி ளில் பயணித்த மிருசுவில் வடக்குப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் படு காயமடைந்த நிலை யில் சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

விபத்து தொடர்பான மேல திக விசாரணைகளை கொடி காமம் பொலிஸார் முன்னெ டுத்து வருகின்றனர்.(5-4-30)

# இரதோற்சவம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் இராஜதானி யின் முதன்மைக் கோயிலாக விளங்கும் பிரசித்தி பெற்ற நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளை யார் ஆலயத்தில் விசேட அபி ஷேக அலங்கார உற்சவம் கட ந்த 18 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்தும் நடைபெற்று வரு கிறது.

தொடர்ந்து பத்துத் தினங் கள் இடம்பெற்று வரும் இவ் அலங்கார உற்சவத்தில் நாளை மறுதினம் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியளவில் மகாரத உற்ச வமும் மறுநாள் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சித்திரா பௌர்ணமி தினத்தன்று காலை 8.30 மணியளவில் ஸ்ரீ கைலாசா தீர்த்தத்தமும் விசேட பூசை வழிபாடு இடம் பெறும்.

இதேவேளை, மேற்படி ஆல யம் பாலஸ்தாபனம் செய்யப்பட் டிருப்பதால் இந்த வருடமும் மஹோற்சவம் நடைபெற வில்லை எனவும் இதன் கார ணமாக விசேட அபிஷேக அலங்கார உற்சவம் நடை பெற்று வருவதாகவும் ஆலய ஆதீன ஹர்த்தா தெரிவித் துள்ளார். (5-4-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணிகள் மூலம் தொற்று பரவுவதை தடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

விமானப் பயணிகளின் மூலம் கொரோனா வைரஸ் நாட்டிற்குள் நுழைவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

விமானப் பயணிகள் ஒன்றிணைவதை தடுப்பதற்கான விசேட வேலைத்திட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சகல விமானப் பயணிகளும் சுகாதார சட்டங்களை பின்பற்றுவது அவசியமாகும்.

அத்தியாவசிய விமானப் பணியாளர்களை மாத்திரம் இன்று தொடக்கம் சேவைக்கு அழைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# கொரோனா அச்சம்; மூடப்பட்டது பொலிஸ் நிலையம்

(சிலாபம்)

சிலாபம் கொஸ்வத்தை பொலிஸ் நிலையம் நேற்றுக் காலை தற்காலிகமாக மூடப் பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பரிசோதகர் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட் டதை தொடர்ந்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (நி-4)

# யாழ்ப்பாணம் உட்பட பல இடங்களில் துணைக்கொத்தணிகள் உருவாகும் அபாயம்

**(கொழும்பு)**

**சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டைத் தொடர்ந்து நாடு முழுவதும் பல பகுதிகளில் கொரோனா வைரஸ் துணைக் கொத்தணிகள் உருவாகியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.**

இந்த துணைக் கொத்தணிகள் குருநாகல், நாரம்பல, அல்லவா, கம்பஹா, கொழும்பு, புத்தளம், திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் தோன்றியுள்ளதாக பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் சங்கத்தின் செயலாளர் எம். பாலசூரிய ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

ஆரம்பத்தில் பிலியந்தலை, மகரகம மற்றும் பமுனுவ பகுதிகளிலிருந்து துணைக் கொத்தணிகள் பதிவாகியுள்ளன. அதைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளில் துணைக் கொத்தணிகள் தோன்றியதாக தெரிவித்தார்.

நிலைமையைக் கட்டுப்படுத்த அவசர நடவடிக்கைகள் எடுக்காவிட்டால், மீண்டும் ஒரு ஆபத்தான இடமாக கொழும்பு மாறுவதுடன், டில்லியின் நிலை போன்ற பாதிப்பை எதிர் கொள்ளும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது ஒரு முன்னெச்சரிக்கை மட்டுமே என்றும் வரவிருக்கும் மூன்று வாரங்கள் முக்கியமானதாக இருக்கும் என்றும் சுகாதார வழிகாட்டுதல்களை மிக முன்னுரிமையுடன் பராமரிக்க வேண்டும் என்றும் இல்லையெனில் ஒரு மோசமான சூழ்நிலையை எதிர் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (நி-4)


**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1990 இல் பிறந்த கிரக பாவம் 33 1/2, சுவாதி நட்சத்திரத்தில் பிறந்த மணமனுக்கு பொருத்தமான மணமகள் தேவை

**தொடர்பு: 077 163 9557**
**077 653 2446**

(6685)

**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 28 ½ செவ் 4 சூரி 2 இல்<br>உயரம்: 6'3"<br>தகைமை/தொழில்: A/L. எலெக்ரீசியன்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு அரச உத்தியோகம் அல்லது வெளிநாடு<br>தொ.இ: B/436 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 35 ¼ செவ் 8 சூரி 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:. **Seylan Bank Assit. Manager**<br>எதிர்பார்ப்பு: **Doctor, Engineer, Accountant, Bank Manager, Etc)**<br>தொ.இ: G/4224 |
| பிறப்பு: 1976 இந்து நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 37 செவ்.சூரி 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BEd பட்டதாரி, ஆசிரியர்.<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில், உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/455 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 38 செவ் 11 சூரி 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: **BIT-IT-Degree (Private Colombo)**<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/4229 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: செவ் 10 சூரி 11 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: **A/L- Work- Web Designer (Private 6 Years)**<br>எதிர்பார்ப்பு: வேலை/வேலையற்ற பெண், உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/456 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 17 ¼ செவ் 11 சூரி 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: **HND IT, IT Teacher**<br>எதிர்பார்ப்பு: அரச உயர் பதவி உத்தியோகம்<br>தொ.இ: G/4232 |
| பிறப்பு: 1971 இந்து நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 15 செவ் 9 சூரி 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, Computer Technician<br>எதிர்பார்ப்பு: வவுனியாவில் பெண் இருத்தல் நன்று<br>தொ.இ: B/460 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 22 செவ் 6 சூரி 5 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார்,சொந்தத்தொழில்<br>தொ.இ: G/4246 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் [illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 [illegible]

**CCIY**

**யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கீழ்குறிப்பிட்ட பதவிகளிற்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

1. **அலுவலக உதவியாளர் (ஆண்) - 01**

20-45 வயதிற்கு உட்பட்ட ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளினை கொண்டிருத்தல் வேண்டும்

1. ஆகக்குறைந்த கல்வித்தகைமை A/L
2. ஆகக்குறைந்தது 1-2 ஆண்டுகள் அலுவலக உதவியாளராக கடமையாற்றிய அனுபவம்.
3. கணினி தொடர்பான அறிவு அத்துடன் Ms office, மின்னஞ்சல் மற்றும் இணையம் தொடர்பில் அனுபவம் விரும்பத்தக்கது.
4. வாகன சாரதி அனுமதிப்பத்திரம் கட்டாயமானது.
5. குழுச் செயற்பாட்டில் ஆர்வமுடையவராக இருத்தல் வேண்டும்.
6. கணக்கியல், சந்தைப்படுத்தல், தொடர்பாடல் போன்ற விடயங்களில் முன் அனுபவம் விரும்பத்தக்கது.
7. தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தொடர்பாடல்கள் மேற்கொள்ளக்கூடியவராக இருத்தல் வேண்டும். சிங்களம் விரும்பத்தக்கது.
8. யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.

பொருத்தமான விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரத்தினை தலைவர், இல.55, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 30.04.2021 ற்கு முன்னதாக பதிவுத்தபாலில் அல்லது எமது மின்னஞ்சல் முகவரிக்கு Jaffnacciy@gmail.com அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலதிக தொடர்புகளுக்கு 021 222 6608/ 070 366 3600

**தலைவர்**
**யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம்.**

**2.VACANCY FOR THE POST OF MANAGER ADMIN (Female)- 01 position**

-Should posses 3-5 years experience in managerial position
-Language fluency in Tamil, English are compulsory and Sinhala is preferable
-HR, Administration and project Management experiences are essential.
-Should work with minimum supervision
-Should be an excellent team player.
-Applicant should be based in jaffna district.
-Should work for a period of 3-5 years minimum
-Should have valid driving license
-Age limit between 35-50 years
-Should have knowledge experiences in financial management, budgeting and accounting.
-Minimum educational qualification-basic degree in Financial Management/ Accounting/HR/ Administration/project Management or HNDA
-Should have knowledge in project reporting.
-IT skills in handling MS Office, Website and database management are necessary.
-Entitle for EPF & ETF payments.
-Salary will be based on qualifications and professional experiences.

Please send us your application with CV and a covering letter on or before 30th of April 2021 to Chairman, No.55, Kachcheri Nallur Road, Jaffna by registered post. Or send via email: Jaffnacciy@gmail.com. For further information, please call to: 021 222 6608 / 070 366 3600

**Chairman**
**Chamber of Commerce and Industries of Yarlpanam**

(C-2025)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பேருந்துகள் தொடர்பில் மக்கள் விசனம் தெரிவிப்பு

(மன்னார்)

**வவுனியா - மன்னாருக்கு இடையில் சேவையில் ஈடுப டும் இலங்கை போக்குவரத்து சபையின் மன்னார் சாலைக்கு (டிப்போ) சொந்தமான பேருந்து தரமற்ற நிலையில் சேவையில் ஈடுபடுவதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

குறித்த பேருந்து உரிய பராமரிப்புக்கள் இன்றி அதன் ஆசனங்கள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. அதனால் பயணிகள் ஆசனத் தில் அமரும் போது அசௌகரி யங்களை எதிர்நோக்குக்கின் றனர். அத்துடன் ஆசனங்கள் கிழிந்து தொங்குவதனால் அருவருப்பான மன நிலையி லையே பேருந்தில் பயண த்தை தொடர வேண்டிய நிலையுள்ளது.


குறித்த பேருந்து ஆசனங் களைச் சீர் செய்து, பேருந் தினை உரிய முறையில் பரா மரித்து சேவையில் ஈடுபட உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பய ணிகள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

இதேவேளை மன்னாருக் கும் - யாழ்ப்பாணத்திற்கும் இடையில் சேவையில் ஈடுபட்ட மன்னார் சாலைக்கு சொந்த மான பேருந்து ஒன்றும் இதே போன்ற நிலையிலேயே காணப்படுகிறது.

இவ்விடயம் இணையத் தளங்களில் வெளியான நிலை யில் மன்னார் சாலைக்கு (டிப்போ) சென்ற மன்னார் மாவட்ட செயலாளர் அதிகாரி களிடம் பேருந்துக்கள் தொடர் பிலும் அவற்றின் தரங்கள் மற்றும் சேவை என்பவை தொடர்பில் பேச்சு நடத்தினார். அதன்போது மன்னார் சாலை க்கு பேருந்துக்கள் போதாமை இருந்தமையாலையே அந்த பேருந்தை சேவையில் ஈடு படுத்தியதாகவும், அதனால் பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமங் களுக்கு மன்னிப்புக் கோருவதா கவும் அதிகாரிகள் தெரிவித்த னர்.

அத்துடன் மன்னார் சாலை க்கு 2014 ஆம் ஆண்டுக்கு பின்னர் பேருந்துகள் வழங்கப் படவில்லை எனவும் பழுத டைந்த பேருந்துகளை திருத் துதல், ஆசனங்களைச் சீர் செய் தல் போன்ற வேலைத்திட்டங் களுக்கான செலவீனங்களை பெற்றுக்கொள்ள தாமதமா வதால் அவற்றை சீர் செய்ய காலதாமதமாவதாக மாவட்ட செயலரிடம் சாலை (டிப்போ) அதிகாரிகள் தெரிவித்திருந்த னர். அது தொடர்பில் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலும் பேசப்பட் டது. (5-4-33)

## தொல்பொருள் நாணயங்கள் விற்பனை - ஒருவர் கைது



(மன்னார்)

புதையலில் இருந்து கிடைக் கப் பெற்ற தொல்பொருள் நாண யக் குற்றிகள் எனக் கூறி குறி த்த நாணயக்குற்றிகளை விற் பனை செய்ய முயன்ற இளை ஞர் ஒருவரை மன்னார் மாவ ட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த நபரை மன்னார் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகி ன்ற நிலையில் விசாரணை யின் பின் குறித்த நபர் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள் ளதோடு, மீட்கப்பட்ட நாண யக்குற்றிகளும் மன்னார் நீதி மன்றத்தில் ஒப்படைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக் கது. (5-4-285)

## பிரதேச சபையினால் கால்நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத் தின் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி கால்நடை களின் அட்டகாசம் அதிகரித்து வருவதாக மக்களால் தொடர்ச் சியாக குற்றஞ்சாட்டப்பட்டுவந்த நிலையில் கட்டாக்காலி கால் நடைகளை கட்டுப்படுத்துவதற் கான நடவடிக்கைகளில் பிரதேச சபையினர் ஈடுபடுள்ளனர்.

குறித்த பிரதேசசபை எல் லைக்குட்பட்ட பகுதிகளில் 34 கால்நடைகள் பிடிக்கப்பட்டுள் ளன. இந்த நடவடிக்கை தொடர்ச்சியாக இடம்பெறும் எனவும் உரிமையாளர்கள் கால்நடைகளை கட்டி வளர்ப் பதன் ஊடாக வீண் செலவு களைத் தவிர்த்துக் கொள்வ தோடு கட்டாக்காலி கால்நடை களால் ஏற்படும் வீதி விபத்து களை குறைக்கும் செயற்பாடாக அமையும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (5-4-281)

## மரை இறைச்சி தருவதாகக்கூறி பண மோசடி

(நெளுக்குளம்)

வவுனியா மகாறம்பைக் குளம் பகுதியில் மரை இறைச்சி தருவதாகக் கூறி 15 இற்கும் மேற்பட்ட குடும்பங் களிடம் பணம் சேகரித்த நபர் அவர்களை ஏமாற்றியுள் ளார்.

குறித்த கிராமத்தில் உள்ள வீடுகளிற்கு சென்ற அவர் மரை இறைச்சி தன்னிடம் உள்ள தாகவும் ஒரு கிலோ 800 ரூபாய் என்றும் தெரிவித்துள் ளார். இதனை நம்பிய பலர் குறித்த நபரிடம் பணத்தினை வழங்கியுள்ளனர்.

எனினும் நீண்ட நாளா கியும் பணத்தினை வழங் கியவர்களிற்கு இறைச்சியும் வழங்கப்படவில்லை, பணத்தி னையும் திருப்பிக் கொடுக்க வில்லை.

எனவே இவ்வாறான செயற் பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக மக்கள் அவதான மாக இருக்கவும். (5-4-299)

## ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் பல்வேறு சிறப்பம்சங்களை எடுத்துக் கூறும் வகையில் "மாவட்ட கீதம்" வடிவமைப் பதற்கு மாவட்ட கலைஞர்கள் மற்றும் கலை ஆர்வமுடை யவர்களிடம் இருந்து ஆக் கங்கள் கோரப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

விசேடமாக மாவட்டத்திற்கே உரியதான வரலாற்றுத் தடை யங்கள் மற்றும் அதன் சிறப் பம்சங்களை எடுத்து இயம்பும் வகையிலும் மூன்று தொடக்கம் நான்கு நிமிடங்களுக்குள் இசைக்கக்கூடியதாக மேற்படி கீதம் அமைதல் வேண்டும்.

எழுத்துப் பிரதியாகவோ அல்லது இசையமைத்து இறு வெட்டு வடிவிலோ கீதத்தினை சமர்ப்பிக்க முடியும்.

ஆக்கங்கள் அனைத்தும் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயல கம், மன்னார் என்ற முகவரி க்கு கிடைக்கக்கூடிய வகையில் நேரடியாக அல்லது தபால் மூலம் சமர்ப்பிக்க முடியும் என அறி வித்துள்ளார். (5-285)




# வீதி அமைக்கப்பட்ட பின்னரே அணைக்கட்டினை புனரமைக்க முடியும்

## கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்

(அக்கராயன்)

முல்லைத்தீவு உயிலங் குளத்தின் கீழான வீதி அமைக் கப்பட்டாலே குளத்தின் அணைக்கட்டினைப் புனரமை க்க முடியும் என துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தி யோகத்தர் த.பிரியதர்சினி தெரிவித்துள்ளார்.

சேதமடைந்த உயிலங் குளம் அணைக்கட்டு ஏன் புன ரமைக்கப்படவில்லை என வினவிய போதே அவர் இத னைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், போக் குவரத்துக்குப் பயன்படுத் தப் படும் உயிலங்குளத்தின் அணைக்கட்டை புனரமை க்க வேண்டியது அவசியமா னது.

ஆனால் போக்குவரத்திற்கு குளத்தின் கீழான வீதி அமை க்கப்பட்ட பின்னரே அணைக் கட்டைப் புனரமைக்க முடியும். அதற்கான நில அளவை தற் போது இடம்பெறுகிறது.

இரண்டு வேலைகளை யும் முன்னெடுப்பதற்கு நிதி தேவைப்படுகின்றது.

குளத்தின் அணைக்கட் டினை புனரமைப்பதற்கு முன் னர் குளத்தின் கீழான புதிய வீதியினை உருவாக்குவதன் மூலம் துணுக்காயில் இருந்து உயிலங்குளம், தென்னியங் குளம், கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம், அக்க ராயன் வரையான போக்கு வரத்துக்களை முன்னெடுக்க முடி யும். தற்போது சேதமடைந்த அணைக்கட்டு வழியாகவே துணுக்காயில் இருந்து மேற் படி கிராமங்களுக்கான போக் குவரத்துகள் நடைபெறுகின் றன.

வீதியை அமைக்காமல் குளத்தினை புனரமைத்தால் மீண்டும் அணைக்கட்டு வழி யாக வாகனங்கள் பயணித்தால் அணைக்கட்டு சேதமடையக் கூடிய நிலையே காணப்படும் எனவும் தெரிவித்தார்.

துணுக்காய் பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நிறைவேறாத அபிவிருத்தித் திட்டமாக உயிலங்குளம் அணைக்கட்டு புனரமைத்தல் மற்றும் அதன் கீழான வீதி புனரமைத்தல் போன்ற திட் டங்கள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளன. (5-4-350)

## கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும்

(பூநகரி)

சர்வதேச லயன்ஸ் கழகங் கள் நடத்தும் கண்ணுக்கு முத லிடமளிக்கும் வேலைத் திட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் பூநகரி மத்திய விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் கண் பரிசோதனை மேற்கொண்டு கண்ணாடி வழ ங்கப்படும். இந்நிகழ்வை மாவ ட்ட ஆளுநர் சபையின் பிரதிச் செயலாளர் வைத்திய கலாநிதி எம்.கதிர்காமநாதனால் ஆரம் பித்து வைக்கப்படும். தற்போ தைய சூழ்நிலைக் கேற்ப அனை வரும் சுகாதார விதிமுறை களை கடைப்பிடிக்க வேண்டும் என ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (5-4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

24.04.2021
சித்திரை 11, சனிக்கிழமை,
துவாதசி பிற்பகல் 4.18 மணிவரை
உத்தரம் பின்னிரவு 2.02 மணிவரை
சுபநேரம் 3.00-4.30 மணிவரை
இராகுகாலம் 9.00-10.30 மணிவரை
சந்திராஷ்டமம்- சதயம்
சனிப்பிரதோச விரதம்

வளவன்



**மேஷம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், கௌரவமான நாள்.



**ரிஷபம்** பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**மிதுனம்** நண்பர்களின் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.



**கடகம்** கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.



**சிம்மம்** வெளியூர்த் தொடர்புகளால் நன்மையடைவீர்கள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.



**கன்னி** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**துலாம்** உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.



**விருச்சிகம்** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு. கௌரவமான நாள்.



**தனுசு** தொழில் வளர்ச்சி கூடும் நாள், குடும்பத்தில் ஒற்றுமை கூடும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவமான நாள்.



**மகரம்** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், குறை சொல்பவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பயணங்களால் பலனுண்டு.



**கும்பம்** நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், வேலைச்சுமை கூடும் நாள்.



**மீனம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம்.

அன்பினால் வளர்க்கப்பட்டு அறிவினால் நடத்தப்படுவது வாழ்க்கை

# இரசாயன உரங்கள் இறக்குமதிக்கு

## விரைவில் தடை-ஜனாதிபதி அதிரடி உத்தரவு

(கொழும்பு)

**இரசாயன உரங்கள் உயிர்க்கொல்லிகளாகும். இது பல தொற்றா நோய்களுக்கு வழிவகுக்கும். இவ் உரங்களை இறக்கமதி செய்வதை நிறுத்த வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அதிக விளைச்சலை பெற முடியும். குளங்கள், கால்வாய்கள் மற்றும் நிலத்தடி நீர் மாசுபடுவதால் உயிர்களுக்கு ஏற்படும் சேதத்தை அந்த இலாபத்தால் ஈடு செய்ய முடியாது. இரசாயன உரங்களின் தாக்கம் சிறுநீரக நோய் உட்பட பல தொற்றா நோய்களுக்கு வழிவகுத்துள்ளது என்று சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சிகிச்சைக்காக செலவாகும் தொகை மற்றும் உயிர்களுக்கு ஏற்படும் தாக்கம் அதிகம். ஆரோக்கியமான மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த பிரஜையை உருவாக்குவதற்கு நச்சு அல்லாத உணவுக்கான மக்களின் உரிமையை அரசாங்கம் உத்தரவாதம் செய்ய வேண்டும். இந்த நோக்கத்திற்காக நாட்டின் விவசாயத் துறையில் சேதன உரங்களைப் பயன்படுத்துவதற்கு பழக்கப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டவாக்க சபைகளின் தலைவர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

உர இறக்குமதிக்காக ஆண்டு தோறும் செலவிடப்படும் 400 மில்லியன் டொலர்கள் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட முடியும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (நி-4)

# இன்னொரு தாக்குதலுக்கு வாய்ப்பில்லை என்கிறார் கமால்



(கொழும்பு)

நாட்டில் மீண்டுமொரு தாக்குதலை நடத்துவதற்கு அடிப்படைவாதிகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டின் பாதுகாப்பு சிறந்த முறையில் பலப்படுத்தப்பட்டுள்ளமையினால் மீண்டுமொரு தாக்குதலை அடிப்படைவாதிகள் நடத்துவார்களாயின் அது இலகுவான காரியமல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக கமால் குணரத்ன மேலும் தெரிவித்தாவது "புலனாய்வுப் பிரிவு, தங்களது செயற்பாடுகளை சிறந்த முறையில் தற்போது முன்னெடுத்து வருகின்றது.

அதேபோன்று பொலிஸார், முப்படையினரும் நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் மிகவும் அவதானத்துடன் செயற்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அடிப்படைவாதிகள் மீண்டுமொரு தாக்குதலை நாட்டில் நடத்துவது இலகுவான விடயமல்ல. மேலும் திறமையான சில வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன" என அவர் தெரிவித்தார். (நி-4)

# இஸ்லாமிய அடிப்படை வாதம் குறித்து இரு வாரத்திற்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

(கொழும்பு)

மத்ரஸா பாடசாலை, இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பில் அரசாங்கம் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை அரசாங்கம் இரண்டு வார காலத்திற்குள் முழுமையாக செயற்படுத்த வேண்டும். இல்லாவிடின் மாற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் பொதுக் கொள்கைக்கு அமைய செயற்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க அனைத்து சிங்கள அரசியல் வாதிகளும் முதலில் கட்சி பேதங்களை துறந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

மத்ரஸா பாடசாலை கல்வி திணைக்களம் அறிவுறுத்தியுள்ள பாடத்திட்டத்திற்கு முரண்பட்டதாக காணப்படுகிறது. அனைத்து இன மக்களும் கல்வி திணைக்களம் அறிவுறுத்தும் பாடத்திட்டங்களை முழுமையாக பின்பற்ற வேண்டும். மத்ரஸா பாடசாலை குறித்து ஜனாதிப்தி விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை துரிதமாக நிறைவேற்றுவது அவசியமாகும்.

மத்ரஸா பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் கலை, விளையாட்டு என பலதரப்பட்ட பொதுத்துறைகளில் இருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். மதக் கருத்துக்களுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கையின் கல்வி மரபிற்கு மத்ரஸா பாடசாலைகள் பொருத்தமற்றது.

காதி நீதிமன்றம் முழுமையாக தடை செய்யப்பட வேண்டும் என பாராளுமன்றில் தனிநபர் பிரேரணையை முன்வைத்தேன். இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தை இயக்கிய இஸ்லாமிய அடிப்படைவாதம் தற்போதைய அரசாங்கத்தையும் இயக்குகிறதா? என்ற சந்தேகம் காணப்படுகிறது.

மத்ரஸா பாடசாலை, இஸ்லாமிய அடிப்படைவாதம், மற்றும் காதி நீதிமன்றம் ஆகியவை தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை அரசாங்கம் இரண்டு வார காலத்திற்குள் முழுமையாகச் செயற்படுத்த வேண்டும். இல்லாவிடின் மாற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குருபக்தி

கைகளை உயர்த்தி ஆசி வழங்கிவிட்டு துரோணர் அங்கிருந்து சென்று விட்டார். மண்டியிட்டு அமர்ந்திருந்த அந்த வேடுவச் சிறுவன் கண்களில் நீர் பெருக நின்றான். அவனது பல நாள் ஆசை நிறைவேறாமல் போனது பற்றி மிகவும் வருந்தினான்.

எங்கே துரோணர் பாதங்களை வைத்திருந் தாரோ அந்த இடத்திலிருந்து மண்ணை அள்ளிக் கொண்டான். துரோணர் சென்ற திசை நோக்கி வணங்கினான். விடுவிடுவெனத் தன் இருப்பிடம் நோக்கி நடந்தான்.

இல்லம் சேர்ந்த அச் சிறுவன் மண்ணைக் குழைத்து துரோணரைப் போன்ற ஒரு சிலையைச் செய்து வைத்துக் கொண்டான். அந்தச் சிலையின் முன்னால் நின்று கொண்டு வணங்கினான். பின்னர் தனது பயிற்சியைத் தொடங்கினான்.

துரோணரையே தனது குருவாக மானசீகமாக வரித்துக் கொண்டான். விரைவிலேயே சிறந்த வில் வீரனாக ஆனான்.

நாட்கள் கடந்தன. ஒரு நாள் துரோணரும் அவரது மாணாக்கரான நூற்று ஐவரும் காட்டு வழியே சென்று கொண்டிருந்தனர்.

அப்போது அந்தவழியில் இரண்டு காட்டுப் பன்றிகள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அப்போது "அர்ஜுனா! இப்பன்றிகளைக் கொல்" எனக் கட்டளையிட்டார் குரு.



அர்ஜுனன் திகைத்தான். ஒரே பாணத்தினால் இரண்டு உயிர்களை ஒரே சமயத்தில் கொல்ல முடியுமா? குருவே, அப்படிப்பட்ட கலையை நீங்கள் இன்னும் எனக்குக் கற்பிக்கவில்லையே." இதற்குள் இரண்டு பன்றிகளும் வெகு உக்கிரமாகப் போரிட்டுக் கொண்டு வழியை அடைத்துக் கொண்டு இருந்தன. அப்போது எங்கிருந்தோ அம்புகள் வந்து ஒரே அடியில் இரண்டு பன்றிகளையும் வீழ்த்தியது. பன்றிகள் இரண்டும் ஒரே சமயத்தில் வீழ்ந்து இறந்தன. (தொடரும்)

# மகாபாரதம்




"தருமர் வடக்கேயும், பீமன் தெற்கேயும், அருச்சுனன் மேற்கேயும், நகுல, சகாதேவர்கள் கிழக்கேயும் வேட்டைக்குச் சென்றுள்ளனர். அவர்கள் வருவதற்குள் இந்த இடத்தை விட்டு சென்றுவிடு இல்லையேல் அவர்களால் உனக்கு ஆபத்து ஏற்படும்" என்றாள்.

அந்த முரடன் எதையும் கேட்பதாய் இல்லை. காமவயப்பட்ட அவன் அவளை தூக்கிச்செல்ல முயன்றான். அவளது பேலாடையைப்பற்றி இழுத்து தேர் மீது ஏற்ற நினைத்தான். அவன் செயலை, உடன் இருந்தோர் தடுத்தும் கேட்கவில்லை.

வேட்டைக்குச் சென்ற ஐவரும் ஒரிடத்தில் கூடினர். அப்போது "ஆச்சிரமத்தில் ஏதோ ஆபத்து நேர்ந்ததற்கான அபசகுனம் தோன்று கிறது" என்றார் தருமர். விரைவில் ஐவரும் ஆச்சிரமத்திற்கு விரைந்தனர்.

ஜயத்ரதன் தி[illegible]தியை அபகரித்து [illegible] விட்டதை அறிந்தனர். தேர் சென்ற சுவடை வைத்து சென்று ஜயத்ரதனுடன் போரிட்டனர்.

அவனுடன் வந்த அரசர்கள் தோற்று ஓடினர். [illegible] ஜயத்ரதனை பீமன் [illegible]யாக தாக்கினான். அவனை கயிற்றில் கட்டித் தேரில் ஏற்றி தருமரிடம் அழைத்து வந்தான் பீமன்.

"தம்பி இவனை விட்டுவிடு. இவன் நமக்கு மைத்துனன். துரியோதனின் தங்கையான துச்சலையின் கணவன்" என்றார். நாணித்தலை குனிந்து திரும்பிய ஜயத்ரதன் கங்கைக் கரைக்குச் சென்று கடும் தவம் இருந்தான்.

சிவன் காட்சியளித்து "என்ன வரம் வேண்டும்?" என்றார். பாண்டவர்களைக் கொல்லத்தக்க வலிமையை எனக்கு அருள வேண்டும்" என வேண்டினான்.


"கண்ணனின் துணையிருப்பதால் உன்னால் பாண்டவர்களை வெல்ல முடியாது. ஆனாலும் அவர்களை ஒருநாள் எதிர்த்து நிற்குமாற்றலை உனக்கு அளிக்கிறேன். ஆனால் அதனால் அவர்களை அழித்தொழிக்க முடியும் என எண்ணாதே" என்று கூறி மறைந்தார்.

அதுவே போதும் என்ற ஜயத்ரதன் நகரம் போய்ச் சேர்ந்தான். இந்த ஜயத்ரதன் தான் 13ம் நாள் போரில் மாவீரன் அபிமன்யுவைக் கொன்றவன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையல் எண்ணெய்கள் தொடர்பில் விழிப்புடன் இருப்போம்




ஏனெனில் சூரிய காந்தி விதைகளிலிருந்து எண்ணெய் பிரித்தெடுத்தல் மற்றும் சுத்திகரிப்பு செயற்பாட்டின் போது பயன்படுத்தப்படும் அதிக வெப்பநிலை காரணமாக ட்ரான்ஸ் கொழுப்புகள் உருவாகலாம்.

ஒலிவ் எண்ணெய் மற்றும் நல்லெண்ணெய் மிகவும் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பானவையாகக் காணப்படுகிறது.

ஆராய்ச்சிகளின்படி ஒலிவ் எண்ணெயில் ஒரு நிரம்பாத பிணைப்பைக்கொண்ட கொழுப்பமிலங்கள் அதிகளவு காணப்படுவதால் உடலுக்கு ஆரோக்கியமானதாகவும் பொரிப்பதற்கு ஏற்றதாகவும் காணப்படுகிறது. இருப்பினும் ஒலிவ் எண்ணெய் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படாததால் அதன் விலை மிக அதிகமாக உள்ளது.

நல்லெண்ணெய் எங்கள் பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்படுவதுடன் நியாயமான விலையில் கிடைக்கின்றது. ஊட்டச்சத்து அடிப்படையில் இது எமது பிரதேசத்தில் கிடைக்கும் மற்ற எண்ணெய் வகைகளை விட மிகவும் சிறந்த எண்ணெயாகக் கருதப்படுகிறது. இது அதிக வெப்பநிலையில் அனைத்து வகையான உணவுகளையும் பொரிப்பதற்கு ஏற்றதல்ல. எனினும் இதனைக் குறைந்த வெப்ப நிலையில் பொரிப்பதற்குப் பாதுகாப்பாகப் பயன்படுத்தலாம். கொழுப்பமிலங்களைத் தவிர நல்லெணெய்யில் உடலுக்கு நன்மை பயக்கும் இயற்கையான பல மூலக்கூறுகள் காணப்படுகின்றன. இவை ஆரோக்கியத்திற்குக் கூடுதல் நன்மைகளை வழங்குகின்றன. பண்டைய காலங்களிலிருந்து இது மிகவும் ஆரோக்கியமான எண்ணெயாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

எமது நாட்டில் பாம் எண்ணெயானது உணவகங்கள் மற்றும் தெருவோர உணவு விற்பனையாளர்களால் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. பாம் எண்ணெயில் அப்லாடொக்சின் தொடர்பான பிரச்சினை காணப்படாது. ஆராய்ச்சி முடிவுகளின்படி பாம் எண்ணெய் பொரிப்பதற்குப் பயன்படுத்த உகந்தது. இருப்பினும் தேங்காய் எண்ணெயைப் போலவே பாம் எண்ணெயிலும் ஒப்பீட்டளவில் அதிகளவு நிரம்பிய கொழுப்பமிலங்கள் காணப்படுவதனால் இதனை அதிகளவில் உட்கொள்ளும் போது இருதய நோய்களுக்கு வழிவகுக்கும்.

**அப்லாடொக்சின்கள் அற்ற தேங்காய் எண்ணெய் தயாரிப்பது எப்படி?**

ஆபத்தில்லாத தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்வதற்கு மிகவும் எளிதான வழியாக தேங்காய் துருவலில் இருந்து எங்களுக்குத் தேவையான தேங்காய் எண்ணெயை வீட்டிலேயே தயாரிக்கலாம். எனினும் தற்போது இது பெரும்பாலான மக்களுக்குச் சாத்தியமற்றதாகும். எமக்குத் தேவையான எண்ணெயை நாம் தயாரித்த கொப்பராவை எண்ணெய் ஆலைகளில் கொடுத்து உற்பத்தி செய்யும் போது பூஞ்சணங்கள் வளர்ந்த கொப்பராக்களைப் பயன்படுத்தக்கூடாது.

ஒப்பீட்டளவில் ஆரோக்கியத்திற்கு அதிகளவு தீங்கு விளைவிக்காத எண்ணெய் வகைகளை எங்கள் சமையல் தேவைகளுக்காகத் தேர்ந்தெடுக்க வேண்டும். அத்துடன் பூஞ்சணங்களால் பாதிக்கப்பட்ட உணவுகள் மற்றும் அப்லாடொக்சின்களைக் கொண்ட தேங்காய் எண்ணெய் போன்றவற்றை உட்கொள்வதை நாம் முற்றிலும் தவிர்க்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக எந்த வகையான ஆரோக்கியமான எண்ணெயாக இருந்தாலும் நாம் அவற்றை அதிகளவில் உட்கொள்ளும் போது அவை உடல் எடை அதிகரிப்பு மற்றும் பிற உடல்நலப் பிரச்சினைகளை உருவாக்கும். எனவே நாம் உட்கொள்ளும் எண்ணெயின் அளவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதை முக்கியமாக அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

(முற்றும்)

**திருமதி. சுபாஜினி சிவகாந்தன்,**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**விவசாய இரசாயனவியல் துறை,**
**விவசாய பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# கொரோனா சிகிச்சை பிரிவில் தீ விபத்து! 13 நோயாளிகள் உடல் கருகிப் பலி!

(டில்லி)

மகாராஷ்டிரா மாநிலம் - விரார் பகுதியில் இயங்கி வந்த கொரோனா சிகிச்சை மையத்தில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த 13 நோயாளிகள் தீயில் கருகி உயிரிழந்தனர்.

இந்தத் தீ விபத்தில் மேலும் பலர் காயமடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால் உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

மும்பை புறநகர்ப் பகுதியான விரார் பகுதியில் உள்ள விஜய் வல்லப் கொரோனா சிகிச்சை மருத்துவமனையிலேயே நேற்று அதிகாலை 3.30 மணியளவில் திடீரென பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.



இந்த மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த ஏனைய கொரோனாத் தொற்று நோயாளிகள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மகாராஷ்டிராவில் நாசிக்கில் உள்ள ஒரு மருத்துவமனையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஒட்சிசன் வாயு கசிந்த சம்பவத்தில் 24 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவத்தின் பரபரப்பு அடங்குவதற்குள் மற்றொரு மருத்துவமனை தீ விபத்தில் 13 நோயாளிகள் உயிரிழந்துள்ளனர்.

(நி-4-8)

# இந்தியாவை சிவப்பு பட்டியலில் இணைத்தது இங்கிலாந்து; இந்திய விமானங்கள் தரை இறங்க மறுப்பு

(லண்டன்)

இந்தியாவில் கொரோனா பாதிப்பு உச்சம் தொட்டு வருகிறது. இதன் தாக்கம் பிற நாடுகளிலும் எதிரொலித்து வருகிறது.

இந்தியாவை சிவப்பு பட்டியலில் இங்கிலாந்து சேர்த்துள்ளது. இதன் மூலம் இந்தியாவில் இருந்து வருவதற்கு நேற்று உள்ளூர் நேரப்படி அதிகாலை 4 மணியில் இருந்து தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இங்கிலாந்து குடிமக்களாகவோ அல்லது அயர்லாந்து குடிமக்களாகவோ இருந்தால், முந்தைய 10 நாட்கள் இந்தியாவில் தங்கி இருந்துவிட்டு வந்தால், அவர்கள் 10 நாட்கள் ஹோட்டலில் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இங்கிலாந்தில் படிக்கும் இந்திய மாணவர்கள் மற்றும் இந்தியாவுக்கு வந்த இங்கிலாந்து மக்களும் தடை காலம் தொடங்குவதற்கு முன்பே இங்கிலாந்துக்கு திரும்ப ஆவலாக இருந்தனர். இதற்காக அவர்கள் இந்தியாவில் உள்ள விமான நிறுவனங்களை அணுகினர். அவர்களுக்காக நேற்று முன்தினம் கூடுதலாக 8 விமானங்களை இயக்க இந்திய விமான நிறுவனங்கள் முன்வந்தன. ஆனால், அந்த கூடுதல் விமானங்களை தரை இறக்க லண்டனில் உள்ள ஹீத்ரு விமான நிலையம் அனுமதி மறுத்துள்ளது.

தடை காலம் தொடங்குவதற்கு முன்பே அனுமதி மறுத்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடைசி நேர கூடுதல் அழுத்தத்தை தவிர்க்கவே இந்திய விமானங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக லண்டன் விமானநிலையம் விளக்கம் அளித்துள்ளது.

(நி-4-8)

**உலகளவில் கொரோனா**
**உயிரிழப்பு :- 3 088 080**
**தொற்று :- 145 441 187**
**(நேற்றைய நிலவரம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–309

# உலக பூமி தினம் ஏப்ரல் 22



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

இரு தினங்களுக்கு முன்னர் உலக பூமி தினம் ஏப்ரல் 22 இல் உலகெங்கும் கொண்டாடப்பட்டிருக்கின்றது. இது ஒருநாள் கொண்டாட்டமல்ல. வருடம் முழுவதுமாக கொண்டாட வேண்டிய கருவாகும். நாம் ஆர்ப்பரித்து அவதரித்த இப்பூமியினை கொண்டாடுவது இத்தினத்தில் தான். பூமிக்கான முக்கியத்துவத்தை உலக உணவு தாபனத்தினர் உலக பூமி தினத்தை ஏப்ரல் 22 இல் கொண்டாடுவது கனதியாகின்றது.

உலகளாவிய ரீதியில் உணவு மற்றும் விவசாய நிறுவனம் (**Food and Agriculture Organization**) இதற்காக பல வழிகளை கையாண்டு இந்த தினத்தை உலக மக்கள் அனைவரும் அறிந்துணர செய்திருக்கின்றது. உலக பூமி தினத்தின் முக்கியத்துவம் பற்றி உலகமே கொண்டாட வேண்டிய தேவை எழுந்துள்ளதற்கு பல காரணங்களை இனங்கண்டாலும் அவற்றுள் உள்ளார்ந்து எழுந்திருக்கும் முக்கிய காரணமாக மண்வளத்தையும் அதனது பங்களிப்பினையும் குறிப்பிடலாம். பூமியில் உள்ள மண்ணின் வளம் என்பது மண் சார்ந்திருக்கின்ற அனைத்து உயிரினங்களின் வாழ்க்கையையும் அவற்றின் வாழிடத்தையும் இவ்வாறான உயிரினங்களினால் மண்ணின் தன்மையில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களையும் சுட்டி நிற்பதாக பொருள் கொள்ளலாம். மண் அல்லது நிலம் என்பதனூடாக உயிர்ப்பின் தன்மையை வெளிக்காட்டுகின்றதனை காணலாம். அதாவது மண்ணிற்கு உயிருண்டு என கூறுவதில் தப்பேதுமில்லை. மண்ணிலுள்ள உயிர்ப்பின் தன்மையை அதில் பயிரிடும் எந்த வகையான பயிராக இருந்தாலும் அதன் வளர்ச்சியில் உற்பத்தியில் மண்ணின் பங்களிப்பு மிகமிக அதிகம். சிறந்த ஒரு ஊடகமாக மண் இருக்கின்றது என்னும் உண்மையை நாம் அநேகமான இடங்களில் மறந்தே போய் விடுகின்றோம்.

மண் என்பது ஒரு கலவை எனவும் வெறுமனே மண் துணிக்கைகளால் ஆனதுஎன்று நாம் கணித்துவிடக்கூடாது. கலவையானாலும் இந்தக் கலவை பல்வேறுபட்ட உயிரினங்களின் வாழிடமாக இருக்கின்றதென்றால் நம்ப முடிகின்றதா? மண்ணினுள் பல்வேறு வகையான அங்கிகள் வாழ்கின்றன. பொதுவாக இந்த அங்கிகள் இன்னும் நுண்ணங்கிகள் மண்ணை வளப்படுத்தும் செயற்பாட்டுக்காகவே மண்ணில் பொதிந்திருக்கின்றன. மாறாக தீமை தரும் நுண்ணங்கிகள் மற்றும் உயிரினங்களும் இதனுள் உள்ளடக்கம். மண்ணில் அதிகளவில் நன்மை தரும் நுண்ணங்கிகள் காணப்படும் போது அதனை நாம் வளமுள்ள மண்ணாக எண்ணுகின்றோம். நுண்ணங்கிகள் மற்றும் அங்கிகளற்ற மண்ணில் எதுவுமிருக்காது. அதாவது அந்த மண்ணுக்கு உயிர்ப்பிருக்காது. மண்ணில் காணப்படும் அங்கிகள் மற்றும் நுண்ணங்கிகளின் இயக்கத்தினால் காபன் வட்டம், நைதரசன் வட்டம் என பலவகையான ஊட்டச்சத்து மாற்றங்கள் நடைபெறுகின்றன. இத்தகைய மாற்றங்களுக்கு மண்ணில் உள்ள நுண்ணங்கிகளினதும் அங்கிகளினதும் செயற்பாடு முக்கிய காரணங்களாக அமைகின்றன.

இந்த பூகோளத்தில் மண்ணினை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும்? மண்ணினை சிறப்பானதாக நீண்டகாலத்திற்கு வாழ்தகைமையுள்ளதாக முகாமைத்துவப்படுத்தி பாதுபாப்பதனால் பலவிதமான நன்மைகள் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக காலநிலை மாற்றத்தினாலேற்படும் பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கு, பஞ்சத்தை இல்லாதொழிக்க, குடிப்பதற்கு நல்ல நீரை பெற்றுக்கொள்வதற்கு, உயிர்ப்பல்வகைத்தன்மையை பாதுகாத்துக்கொள்ள, இன்னும் மாறிவரும் சூழல் நிலைமைகளுக்குள் எம்மை பழக்கிக்கொள்ள, வரட்சியை தாக்குப்பிடிக்க, வாழ்வாதாரத்தை முன்னேற்ற, சூழல் மாசாக்கிகளின் அளவினை குறைக்க, சூழலில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள ஆகும். மண்ணில் சேதன காபனின் அளவினை அதிகரிக்க தற்போது எங்களிடமுள்ள மண்ணினை அவசியம் நாம் பாதுகாக்கவேண்டும். உலகத்திலுள்ள மண்ணானது காபனை அதிகளவில் கொண்டிருப்பதனால் அது வளியில் பச்சைவீட்டு வாயுக்களின் அளவை குறைப்பதற்கு உதவுகின்றது. மூன்றில் ஒரு பகுதி மண் விரயமாக்கப்பட்டிருக்கின்றது.

பூமியிலுள்ள மண்ணினை பாதுகாப்பதனால் 51ஜிகா தொன்கள் காபனை வளிமண்டலத்திலிருந்து மண்ணினுள் பதிக்க முடியும். இதனால் காலநிலை மாற்றத்தினை நாம் இலகுவாக எதிர்கொள்ள முடியும். 2015 இலிருந்து 2050 வரையான காலப்பகுதியில் உணவுக்கான தேவை 49 சதவீதத்தினால் அதிகரிக்கவிருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாய உற்பத்திகள் அதிகரிக்க வேண்டிய தேவையும் அதிகரிக்கும் மக்கள் தொகைக்கு உணவூட்டவேண்டிய பொறுப்பும் முன்னெழுந்துள்ளது. இதன் மூலமே நாம் இனங்கண்ட பேண்தகு அபிவிருத்திக்கான நோக்கங்களை அடைய முடியும். இவையெல்லாவற்றிற்கும் எமக்கு வளமுள்ள மண் (**Fertile soils**) அவசியமாகின்றது. வளமான மண்ணில் தேவையான அளவு மண் காபன் நிறைந்திருக்கும் போது அது பயிர்களை சிறந்த முறையில் உற்பத்தி செய்வதற்கும் பயிர்கள் சிறப்பாக வளர்வதற்கும் வழிசெய்கின்றது. குறிப்பாக ஊட்டச்சத்துக்களின் மீள்சுழற்சியும் நீர் வடிந்து செல்லும் தன்மையும் மண்ணில் நீர் சேமிப்பதற்கான வழிவகைகளும் மேன்மையுறுவதற்கு இது வழிவகுக்கும். மண்ணில் சிறப்பான முகாமைத்துவத்தின் மூலம் மண் காபனின் அளவை அதிகரிப்பதால் உணவுற்பத்தியை வருடமொன்றுக்கு 17.6 மெகா தொன்களால் அதிகரிக்க முடியும் என அறிய முடிகின்றது. இதன் மூலம் மொத்த உணவுற்பத்தியை வரட்சியான காலப்பகுதியிலும் அதிகரிப்பதற்கு வழி கிடைக்கும்.

அவ்வாறாயின் மண்ணிலுள்ள காபனின் அளவை அளந்தறிய முடிந்தால் பல பிரச்சினைகளுக்கு விடை கண்டிடலாம். ஆனால் இவ்வாறு அளவிடுவது இலகுவான காரியமன்று. அதற்காக அதிகரித்த செலவும் அதிகமான வேலைப்பளுவும் இன்னும் சிறந்த ஆய்வு கூடமும் அவசியமாகும். அநேகமான நாடுகளில் மண்ணிலுள்ள காபனை மதிப்பிடுவதற்கு தேசிய மண் பற்றிய தகவல்கள் முழுமையாக இல்லை. ஆனாலும் வேறுபட்ட முறையியலினூடாக மண்ணிலுள்ள காபனை மதிப்பிடுவதும் சரியான தகவல்களை முழுமையாகத் தராது. இந்நிலையில் தான் உலக மண் தகவல் தொகுதி (**GlobalSoilInformation System - GLOSIS**) உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் முதலாவது உற்பத்தியாக உலக மண் காபன் வரைபடம் (**Global Soil Organic Carbon Map – GSOC Map**) உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அந்தந்த நாடுகள் தங்களது மண் வரைபடத்தினதும் மண்ணின் காபன் வரைபடத்தின் மூலமும் மண்ணில் காபனை வினைத்திறனாக சேமிப்பதற்கான தீர்மானங்களை எடுக்க முடியும். இதன்மூலம் ஒரு நாட்டின் மண்ணின் தகவல்கள் பெறப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு அவை முக்கியமான சான்றாதாரங்களுடனான தீர்மானங்களை எடுப்பதற்கு பயன்படுகின்றன. மேலும் மண்ணரித்தலுக்குள்ளான பகுதிகள், வரட்சியான பகுதிகள் என்பன இலகுவில் இனங்காணப்பட்டு அவற்றினை மேலும் வினைத்திறனாக்குவதற்கான வழிகளைத் தேட வழிசெய்திருக்கின்றது. 2030 ஆம் ஆண்டுக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவை அனைத்து இடங்களிலும் வினைத்திறனாக பயன்படுத்தப்படுகின்றன.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 322




உலக பூமிதினத்தில் பூமிப்பந்திலிருக்கின்ற அனைத்து வளங்களையும் பாதுகாக்கும் அதேநேரத்தில் பூமியிலுள்ள அனைத்து உயிரினங்களையும் பாதுகாக்க வேண்டும். பூமியிலுள்ள வளங்களை பயன்படுத்தினாலும் அவற்றை முழுமையாக அழியவிடாது பாதுகாத்தல் அவசியமானதாகும். இதற்காக பூமிப்பந்தில் கனிம வளங்களை உயிரினங்களை பாதுகாக்கும் வழிமுறைகளை முடுக்கிவிட வேண்டும்.

இதற்காக பல தொண்டு நிறுவனங்கள் கடுமையாக உழைத்தாலும் ஒட்டுமொத்த பூமியையும் பாதுகாக்கும் பொறிமுறைகள் முறையாக அனைத்து நாடுகளினதும் பங்களிப்புடன் நடைபெறுதல் அவசியமானதாகும்.

மண்ணிலுள்ள சேதன காபனை பாதுகாப்பதற்காக இவ்வாறான வரைபடங்கள் உதவுவதோடு அவற்றை பாதுகாப்பாக பயன்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறு உருவாக்கப்பட்ட வரைபடங்களிலிருந்து மக்கள் தற்போது இவற்றைப் பற்றியறிந்து அதன்மூலம் தங்களது விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தவும் ஆவலாக உள்ளனர். மண்ணுக்கான முக்கியத்துவத்தை அறிவிக்கும் உலக பூமி தினம் ஏப்ரல் 22 இல் மக்களால் எதிர்வரும் ஆண்டுகளில் இன்னும் சிறப்பாகக் கொண்டாடப்படல் வேண்டும். பூமித்தாயை நாம் பாதுகாத்தால் எம்மை பூமித்தாய் பாதுகாப்பார். அன்னை மண்ணைக் காப்பதில் நாம் என்றும் முன்னிற்க வேண்டும். அதன் வளத்தைப் பாதுகாப்பதில் எமது விவசாயச் செய்கைகள் திட்டமிடப்படல் வேண்டும். எமது எதிர்கால திட்டத்தில் மண்வளம் எள்ளளவேனும் குறையாமல் அதனை மேலும் அதிகரிக்க நாம் என்றும் முனைப்புக் காட்டுதல் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா 3 ஆவது அலை அச்சுறுத்தல் தளர்த்தப்பட்ட நடைமுறைகள் இறுக்கமாக்கப்படும்

(கொழும்பு)

**நாட்டில் கொரோனா 3 ஆவது அலை அச்சுறுத்தல் சூழ்ந்துள்ள நிலை காரணமாக மீண்டும் ஆபத்து நிலையை எதிர்கொள்ள நேரிட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

எதிர்வரும் நான்கு மாதங்களுக்கு எந்தவொரு வைபவத்திற்கும் அனுமதி வழங்காமல் இருப்பது குறித்து கருத்திற்கொள்ள உள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.



கடந்த காலத்தில் வழங்கப்பட்டிருந்த வழிகாட்டல்கள் ஓரளவு தளர்த்தப்பட்ட போதிலும் தற்போது அவ்வாறு செயற்பட முடியாது என அவர் சுட்டிக்காட்டினார். சுகாதார வழிகாட்டல்களை மக்கள் கடைப்பிடிக்காததால் மீண்டும் ஆபத்து நிலையை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

தற்போது இளம் சந்ததியினர் மத்தியிலும் இந்த வைரஸ் அதிகம் பரவும் ஆபத்துத் தோன்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# பசிலுக்கு நெருக்கமானவர்கள் பதவி இழக்கும் ஆபத்து

(கொழும்பு)

அரசாங்கத்தின் முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட பசில் ராஜபக்ஷவுக்கு நெருக்கமான பலர் விரைவில் தமது பதவிகளை இழக்கும் அபாயத்தில் உள்ளனர் என்று அரசாங்கத்தின் உள்ளக வட்டாரங்கள் தெரிவிப்பதாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் பதவியில் இருந்து இராஜினாமா செய்ய நிர்ப்பந்திக்கப்பட்ட ரேணுகா பெரேரா (சிறிலங்கா பொதுஜன பெரமுனவை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தவர்), இந்த நிகழ்வுகளின் ஆரம்பமாகக் கூறப்படுகிறது.

கடந்த புதன்கிழமை இராஜாங்க அமைச்சர்களுடனான சந்திப்பில் பேசிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,

"பொது சேவைகளை வழங்கும் அரசு நிறுவனங்கள் பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியவில்லை" என்ற குற்றச்சாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அரசு நிறுவனத் தலைவர்கள் தங்கள் கடமைகளைச் செய்யத் தவறியதாக செய்திகள் வந்துள்ளதாகவும் அரசாங்கத்தின் விரும்பிய இலக்குகளை அடையத் தவறிய இதுபோன்ற அலுவலகங்கள் குறித்து அறிக்கை அளிக்குமாறும் அதைச் செய்ய வேண்டுமானால் அதிகாரிகளை மாற்றுவதற்கு கூட தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதற்கிடையில், ரேணுகாவின் இராஜினாமா பசில் ராஜபக்ஷவுக்கு மற்றொரு தீர்க்கமான தோல்வி என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

சுமார் ஏழு மாதங்களுக்கு முன்பு, நாரஹேன்பிட்டியில் உள்ள தேசிய வீடமைப்பு அதிகாரசபை அலுவலக வளாகம் தொடர்பில் வாடிக்கையாளரின் முறைப்பாட்டை அடுத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை திடீரென கண்காணிக்க வைத்தது.

அமைச்சரவை அமைச்சர்கள் இருந்த போதிலும் இராஜாங்க அமைச்சர்களுக்கு அதிக பொறுப்புக்களை வழங்குவதில் ஜனாதிபதி தீவிரம் காட்டுகின்றமை அமைச்சர்களிடையே முணுமுணுப்புகளை எழச் செய்துள்ளதாகவும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-4)

# வைத்தியசாலைக்குச் சென்று ஹரீனை சந்தித்தார் சஜித்



(கொழும்பு)

சுகயீனம் காரணமாக கொழும்பு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோவை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சந்தித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார உள்ளிட்டோர் ஹரீன் பெர்னாண்டோவை பார்க்கச் சென்றனர்.

கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் ஆளும், எதிர்த்தரப்பினருக்கிடையில் பாராளுமன்றத்தில் கடும் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்த நிலையில் மறுநாள் வியாழக்கிழமை ஹரீன் பெர்னாண்டோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அந்த ஒருவன்!

திபெத் நாட்டில் புத்த மடாலயங்கள் நிறைய உண்டு. அதற்கு ஒரு தலைமையகமும் உண்டு. அது திபெத் தலைநகரம் லாசாவிலே இருக்கின்றது.மிகவும் தூரத்துக்கு அப்பாலே மலைகளுக்கு நடுவிலே ஒரு கிளை மடாலயம்.அந்த மடத்தின் தலைவருக்கு வயதாகிவிட்டது. அதனால் தலைமைப் பொறுப்பை வேறு ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.உடனே ஒரு லாமாவைக் கூப்பிட்டார். அவர் மூலமாக தலைமை மடாலயத்திற்குச் செய்தி அனுப்பினார்.பொருத்தமான வாரிசு ஒருத்தரை அனுப்பி வைக்கும் படியாக.

அந்த வாலிப லாமா புறப்பட்டார். காடு மேடெல்லாம் நடந்து போனார். நிறைய நாள் கழித்து தலைமைப் பீடத்தை அடைந்தார்.

தலைமைக் குருவிடம் விபரத்தைச் சொன்னார். தகுதியான ஒருவரை அனுப்பி வைத்தால் அழைத்துக் கொண்டு போகின்றேன் என்றார்.சரி நாளை காலையில் நீ அவர்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு போகலாம் என்றார் அவர்.அவர்கள் எல்லோரையுமா? அங்கே தேவைப்படுவது ஒருத்தர் தானே என்றார் இவர்.

ஆமாம் என்றார். பின்பு ஏன் எல்லோரையும் அழைத்துக் கொண்டுபோகச் சொல்கின்றீர்கள்? என்றார்.அது இப்பொழுது உனக்குப் புரியாது. நான் நூறு பிக்குகளை அனுப்புகின்றேன் என்றார். அவ்வளவு பேரையும் அங்கே வைத்துச் சமாளிக்க முடியாது என்றார் இவர்.

இப்பொழுது தலைமைக்குரு சொன்னார்...அதைப் பற்றி கவலைப்படாதே நான் 100பேரை அனுப்புகின்றேன். அதிலே 99 பேர் வழியிலேயே காணாமல் போய்விடுவார்கள். ஒருத்தன் மட்டும் தான் வருவான். அவனும் அங்கே வந்து சேர்ந்துவிட்டான் என்றால் நீ மிகவும் கொடுத்து வைத்தவன் என்றார். மறுநாள் அந்த வாலிப லாமா நூறு பேரை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

போகின்ற வழியில் பல பேர் அங்கங்கே போய் விட்டார்கள்.

வழியில் அவர்களது ஊர்கள் இருந்தது தான் காரணம். அப்பா அம்மாவைப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டு சில பேரும், சொந்த பந்தத்தைப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டு சில பேரும் சென்றனர். ஒரு வாரம் ஆகிவிட்டது. இப்பொழுது மிஞ்சியது பத்து பேர்.

வழியில் ஒரு நகரம் . அங்கே சில பிக்குகள் வந்து சந்தித்தார்கள். எங்கள் மடத்துத் தலைவர் இறந்துவிட்டார். உங்களிலே யாராவது ஒருத்தர் எங்களுக்குத் தலைவராக வர முடியுமா? என்றார்கள்.

பத்து பேரும் தயார். அதிலே ஒரத்தரை அழைத்துக் கொண்டு அவர்கள் போய்விட்டார்கள்.இன்னொரு ஊரிலே சில பேர் வந்தார்கள். வழி மறித்தார்கள். நில்லுங்கள்... எங்கள் மன்னருடைய மகளுக்குத் திருமணம். அதை நடத்தி வைக்க மூன்று லாமாக்கள் தேவை என்றார்.இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக எல்லோரும் காலி.கடைசியில் இரண்டு பேர் மிஞ்சினார்கள். அங்கே ஓர் இளம்பெண் எதிரில் வந்தாள்.

எங்கள் அப்பா வேட்டைக்குப் போயிருக்கின்றார். இன்னும் திரும்பி வரவில்லை. வீட்டிலே வேறு யாரும் இல்லை. தனியாக இருக்கப் பயமாக இருக்கிறது. யாராவது ஒருத்தர் எனக்குத் துணையாக இருக்க வேண்டும் என்றாள்.

எங்கள் இரண்டு பேரில் நீயே ஒருத்தரைத் தேர்ந்து எடுத்துக்கொள். இல்லை என்றால் எங்களுக்குள்ளே சண்டை வந்துவிடும் என்றார்கள். இப்பொழுது மிஞ்சியவர் ஒருத்தர். அவருக்கும் ஒரு சோதனை வந்தது.ஒரு தர்க்கவாதி எதிரில் வந்தான். உன்னுடன் வாதம் செய்ய வேண்டும் என்றான்.

இவனுடன் வாதம் செய்கின்றேன். அது முடிய மிகவும் காலம் ஆகலாம். தர்க்கத்திலே நான் ஜெயித்தால் அங்கே வருகின்றேன்.இல்லை என்றால் இவருடைய சீடனாகி விடுவேன் என்றார்.

கடைசியாக அழைக்க வந்த வாலிப லாமா மட்டும் வெறும் கையோடு திரும்பிப் போனார். அங்கே இருந்த வயசான மடாதிபதி கேட்டார்...எத்தனை பேர் அங்கேயிருந்து புறப்பட்டீர்கள்? என்றார். என்னையும் சேர்த்து நூற்றி ஒன்று என்றார்.நல்லது நீயாவது திரும்பி வந்தாயே. நீ தான் எனது வாரிசு.அந்த நூறு பேரில் யாரும் வரமாட்டார்கள் என்றார். ஏன் என்றால் அவருக்குத் தெரியும் இவர் ஒருவர் தான் திரும்பி வருவார் என்பது.

திபெத்தில் ஒரு பழங்காலப் பழமொழி உண்டாம்.

நூறு பேர் செல்லலாம். எப்பொழுதாவது ஒருவன் அபூர்வமாக அடைய வேண்டிய இடத்தை அடைவான். இது தான் அந்த பழமொழி.

ஓர் உன்னதமான இலக்கை அடைய வேண்டும் என்றால் அது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை. இந்தக் காலத்து மடாலயம் ஒன்று. அதிலே ஒரு தலைவர். அவருக்கு வயதாகிவிட்டது. தனக்கு ஒரு வாரிசை நியமிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். மிகவும் கஷ்டப்பட்டு ஒருவரைப் பிடித்தார். தனக்கு வாரிசாக நியமித்துவிட்டு அவர் சமாதி ஆகிவிட்டார்.

புதிதாக பொறுப்பேற்றுக் கொண்டவரிடம் பத்திரிகை நிருபர்கள் கேட்டார்கள்... அவர் உங்கள் பொறுப்பிலே விட்டுவிட்டுப் போனது சுமாராக எவ்வளவு தேறும்? என்றார்கள்.

அது என்ன ஒரு 50 இலட்சம் இருக்கும் என்றார். அவ்வளவும் பணமா? என்றார்கள். இல்லைங்க கடன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 22 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்
கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



கொழும்பில் வாழ்ந்து வந்த வி.ஆர்.வடிவேற்கரசன், எஸ்.பி.சாமி, ஈ.சண்முகம, ஆர்.கந்தசாமி, ஜ.ரீ.சம்பந்தன் ஆகியோரை உறுப்பினர்களாகவும் வி.எஸ். துரைராஜாவை தலைவராகவும் எஸ்.திருச்செல்வத்தை செயலாளராகவும் நியமித்தார்கள். அந்த நிர்வாகக்குழு "யாழ்ப்பாணப் பொதுசன நூலக வாரத்தை" 1982 ஆம் ஆண்டு மே மாதம் 15-21ஆம் திகதிகளில் நடத்தியது. கொழும்பு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம் செயலகமாகவும் சேகரிப்பு நிலையமாகவும் விளங்கியது.

யாழ்ப்பாணத்திலிருந்து மாநகர பிதா இராஜா விசுவநாதன், மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் கொழும்புக்கு வந்து, நூலகவாரம் முழுவதும் தங்கியிருந்தார்கள். கொழும்பில் பத்திரிகைகள் மூன்று மொழியிலும், ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில்,பெரிய பிரசாரம் செய்தன.

சகல மட்டத்திலிருந்தவர்களையும், செல்வரும், வறியவர்களும், இளையோரும், முதியோரும், சகல சமூகத்தைச் சேர்ந்தோரும், சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், மற்றும் பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் அனைவரும் சரஸ்வதி மண்டபத்துக்கு வந்து தமது காணிக்கையை அந்தக் கல்விக் கூடத்துக்கு அர்ப்பணித்தார்கள்.


முதல் நாளே ரூபா 90,000 சேர்ந்தது. புத்தகங்கள் பழையன, புதியன எல்லாம் ஆயிரக்கணக்கில் சேர்ந்தன. இந்தப் புத்தகங்களை நிர்வாகக் குழுவின் தொண்டர்கள் தூசு அகற்றி துப்புரவாக்கி, பெட்டிகளில் அடைத்து, டிரக்குகளில் ஏற்றி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தார்கள். மேலும் கொழும்பு நிர்வாகக் குழுவினர் புகழ் பெற்ற இந்திய பரத நாட்டியப் பேரொளி சுவர்ணமுகியைக் கொண்டு கொழும்பில் நடன நிகழ்ச்சியை மேலதிகமாக நடத்தினர். நூலக வாரமாகிய கடைசித் தினத்தில், அதாவது 1982 ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி, கொடிதினமாகக் கொண்டாடினர். சகல பொதுமக்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் தமது காணிக்கையை கல்வித் தேவாலயத்துக்குக் கொடுக்க வாய்ப்பளிக்கும் என்று நிர்வாகக் குழுவினர் நம்பினர். புனரமைக்கப்பட்ட நூலகம் எப்படியிருக்குமெனக் காட்டும் வகையில் கொடியில் படம் வரையப்பட்டிருந்தது.





யாழ் மாநகராதிபதி விசுவநாதன் முதலாவது கொடியை கொழும்பு மாநகராதிபதி சிறிசேனா கூரேயின் சட்டையில் அணிவிக்கிறார். யாழ் மாநகரசபை ஆணையாளர் சிவஞானம் இடதுபுறமாகவும் ஒழுங்குச்சபைத்தலைவர் துரைராஜா நடுவிலும். செயலாளர் திருச்செல்வம் வலது புறத்திலும் காணப்படுகிறார்கள்.

கொடிதினம், கொழும்பு மாநகரசபையில் 1982ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி காலையில் அங்குரார்ப்பணமானது. யாழ்ப்பாண மாநகர பிதா இராஜா விசுவநாதன் முதலாவது கொடியை கொழும்பு மாநகர பிதா சிரிசேன கூரேயின் சட்டையில் குத்தினார். அந்தச் சமயத்தில் யாழ். மாநகர ஆணையாளர் சி.வி.கே. சிவஞர்னம், நிர்வாகக் குழு அங்கத்தினர்கள் ஆகியோர் பிரசன்னமளித்திருந்தார்கள்.

நூற்றுக்கணக்கான தொண்டர்கள் கையில் உண்டியலுடனும் இதயத்தில் நூலகத்தின் மீதுள்ள பக்தியுடனும் கொழும்பு மாநகரத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் கொடி கொடுப்பதும் உண்டியலை நிரப்புவதுமாகத் திரிந்தார்கள்.




நோர்வேயில் உபயோகிக்கப்பட்ட கொடி




கொழும்பில் உபயோகிக்கப்பட்ட கொடி

நூலகத்தை மீட்டெடுப்பது புனித காணிக்கை என்ற நல்லெண்ணத்துடன் பொது மக்கள் ஆதரவு தந்தார்கள்.

அதே சமயத்தில் "நோர்வே நாட்டிலும் கொடிதினம் நடைபெற்றது. இது கடல் கடந்த நாட்டிலுள்ள ஆதரவை நிரூபிப்பதாக அமைந்தது.

யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தைப் புனரமைப்பு செய்ய, யாழ் நூலக வாரத்திலும், கொடி தினத்திலும் பொதுமக்கள், எந்த இனம், மதத்தைச் சார்ந்தவர்களாயினும் அந்தரங்க சுத்தியுடன் ஒருமனதாகத் திரண்டு அதற்கு ஆதரவளிக்க வேண்டும், பணம் கொடுக்க வேண்டுமென்று நடந்து கொண்டமை இன வெறிகொண்ட அரசியல் தலைவர்களின் அற்ப செயல்களுக்கு தாம் பொறுப்பல்லவென்பதைப் பறை சாற்றுகின்றது.(நன்றி- யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் அதன் சாம்பலிலிருந்து எழுகின்றது)

இக் கொடிதின நிகழ்ச்சிகள் (கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம்) மூலம் 738,114ரூபா 15 சதம் பெறப்பட்டது.

### தீக்கிரையான நூலகக்கட்டடம் மாதிரியான ஒரு புதிய கட்டட நிர்மாணம்

எரிந்துபோன யாழ். நூலகத்தை மீளக் கட்டியெழுப்புதல் வேண்டும் என்கிற ஒரே எண்ணம் யாழ்ப்பாண மக்களையெல்லாம் ஒன்றுபடுத்தியது. பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்லூரியதிபர்கள், அந்நிய நாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்கள் மதச்சார்புடையதும் சார்பற்றதுமான பெருமக்கள் நிறுவனங்கள், மாநகரசபை ஆகியன எடுத்துக்கொண்ட பெரு முயற்சியின் பலனாக, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரச உதவியாக ஏற்பாடு செய்தளித்த இருபது லட்சரூபாய் நிதியுத விப்பணத்துடன் இந்நூலகத்தின் புனர்நிர்மாணப்பணி ஆரம்பிக்கப் பட்டது.

தீக்கிரையான நூலகக் கட்டடம் மாதிரியான ஒரு கட்டடம் புதிதாக நிர்மாணிக்கும் எண்ணத்துடன் வரைபடங்கள் வரையப்பட்டன. அதாவது எரிந்து போன கட்டடத்தை அலங்கரித்த திராவிடக் கட்டடக்கலை அம்சங்கள் அனைத்தும் அச்சொட்டாகப் பிரதிபலிக்குமாறு கவனமெடுத்து படங்கள் வரையப்பட்டன.

நடுவில் மத்திய மண்டபமும் இருபக்கங்களிலும் இரண்டு மாடிகள் கொண்ட விசாலமான அறைகளும் அமையும் வண்ணமும் கட்டடத்தின் முகப்பு, கோட்டையையும் முனியப்பர் கோவிலையும் நோக்கியிருக்கத்தக்கதாகவும் பிரதான வாசலை காங்கேசன்துறை வீதியிலிருந்து அடையத்தக்கதாகவும் படங்கள் வரையப்பட்டன.

அவ் வரைபடத்துக்கு ஏற்ப 1982 ஆம் ஆண்டு பெப்ரவரி 7 ஆம் திகதி, நகரபிதா இராஜா விசுவநாதன் சம்பிரதாய முறைப்படி அடிக்கல் நாட்டி நிர்மாண வேலைகளை ஆரம்பித்துவைத்தார். இப்பணிக்காக பொறியியலாளர் ந.நடேசன் முழு நேரப் பணியாளராக நியமிக்கப் பெற்று அதற்கான வேலைகளும் துரித கதியில் செயற்படுத்தப்பட்டது.

(தொடரும்...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் கொரோனா அச்சம்

# இரு பாடசாலைகள் மூடப்பட்டன

(திருமலை)

திருகோணமலையிலுள்ள இரு பாடசாலைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதைத்தொடர்ந்து மாணவர்களின் வருகை கணிசமாககுறைவடைந்தமையைத் தொடர்ந்து பாடசாலையும் மூடப்பட்டுள்ளதாக மாவட்ட பிரதிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வி.பிரேமானந்த் தெரிவித்துள்ளார்.



மேலும் கடந்த 24 மணி நேரத்தில் 46 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றுமாறு அவர் மக்களை வலியுறுத்தியுள்ளார். (நி-4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரதமுறைகள்



### விரதங்கள்

## சந்தோஷம் தரும் சங்கடஹர சதுர்த்தி

(தொடர்ச்சி)

அவரை வழிபட சாஸ்திரம் படிக்க வேண்டும் என்பதில்லை. கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருவார். முடிந்தவர்கள்,

"சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்!
பிரஸன்ன வதனம் தியாயேத்
ஸர்வவிக்ன உபசாந்தயே"
எனக் கூறலாம்.

விநாயகப் பெருமானே உன்னை நினைத்து நான் இந்த விரதத்தைத் தொடங்கி இருக்கிறேன்.

எந்த இடையூறும் இல்லாமல் நடத்திக் கொடுத்து அருள வேண்டும் என்று வேண்டிக் கொள்ள வேண்டும். பின்னர் அன்று முழுவதும் விரதம் இருந்து விநாயகரை அருகம்புல்லினால் பூஜிக்க வேண்டும்.

நாவல்பழம், கொய்யா, பேரிக்காய், கொழுக்கட்டை, சுண்டல் ஆகியவற்றைப் படைக்கலாம். மாலையில் மீண்டும் நீராடி விநாயகரை இரவு சந்திரோதயத்தைப் பார்த்து வணங்க வேண்டும். விநாயகருக்குப் படைத்த பிரசாதங்களை மட்டும் இரவு உணவாக உட்கொள்வது சிறப்பு.

நாள் முழுவதும் உபவாசம் இருக்க முடியாதவர்கள் பால், பழங்கள் உணவாக எடுத்துக் கொள்ளுங்கள். விரதம் மேற்கொள்பவர்கள் கோவிலுக்குச் சென்று விநாயகரை தரிசனம் செய்வது கூடுதல் பலனைத் தரும். விநாயகர் அகவல், விநாயகர் புராணத்தைப் படிப்பதும் நன்மைகளைத் தரும்.

ஸ்ரீகணபதி காயத்ரி

ஓம் தத்புருஷாய வித்மஹே
வக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி; ப்ரசோதயாத்.

விநாயகர் இருக்கும் இடங்கள்
1.அரசமரம் - ஆகாயம்.
2.வாதநாராயண மரம் - வாயு.
3.வன்னிமரம் - அக்னி.
4.நெல்லிமரம் - நீர்.
5.ஆலமரம் - மண்.

### விநாயகருக்கு பிடித்த எள், வெல்லம்



கணபதி என்றிட கவலை தீரும். அவரை பிரதட்சணம் செய்ய வழிமுறைகள் உண்டு.

ஆண்கள் குளித்து விட்டு விபூதி பூசியும் பெண்கள் குங்குமம் வைத்தும் காலை 8 மணிக்குள் விநாயகரை 7 முறை பிரதட்சணம் செய்ய வேண்டும்.

பிள்ளையாருக்குப் பிடித்த எள், வெல்லம் நிவேதனம் செய்ய வேண்டும். சனிக்கிழமைகளில் பிரதட்சணம் செய்வது மிகவும் சிறப்பு. காலை 8 மணிக்குப் பிறகு அரச மரத்தடிக்குப் போகக்கூடாது.

**ஒற்றைக் கண் விநாயகரிடம் கன்னிப்பெண்கள் கேட்கும் வரம்.**

நெல்லை மாவட்டத்தில் நேர் கட்டும் செவலில் உள்ளது ஒற்றைக்கண் விநாயகர் கோவில்.

இந்த விநாயகரை பருவம் அடைந்த கன்னிப் பெண்கள் தங்களுக்கு நல்ல கணவன் கிடைக்க வேண்டி வரம் கேட் [illegible]

[illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செய்தித்துளிகள்

## சஹ்ரானின் மாமனார் உள்ளிட்ட மூவர் கைது

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான குண்டுதாரி சஹ்ரான் ஹசீமின் மாமனார் உள்ளிட்ட மூவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். குளியாப்பிட்டிய - கெகுனகொல்ல பிரதேசத்தில் வைத்து குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சஹ்ரான் ஹஷீம் மற்றும் அவரது ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட அடிப்படைவாத வகுப்புக்களில் கலந்து கொண்ட குற்றச்சாட்டில் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-4)

## மேலும் சில பகுதிகள் முடக்கத்திற்குள்

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இலங்கையில் மேலும் இரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதற்கமைய குருநாகல் மாவட்டத்திலுள்ள நிராவிய, நிகதலுபொத்த ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தற்போது தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை நேற்று முன்தினம் வியாழக்கிழமை குளியாப்பிட்டி பொலிஸ் பிரிவுப் பகுதி தனிமைப்படுத்தல் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது. (நி-4)

## கைதிகளைப் பார்வையிட இன்று முதல் தடை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அனைத்து சிறைச்சாலைகளிலும் கைதிகளைப் பார்வையிட இன்று முதல் இரண்டு வாரங்களுக்குத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கொரோனா நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 120 | 120 |
| தக்காளி | 150 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 |
| கோவா | 120 | 120 | 100 |
| கரட் | 150 | 160 | 200 |
| பூசணி | 60 | 50 | 60 |
| புடோல் | 120 | 80 | 100 |
| வாழைக்காய் | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 240 | 250 | 240 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 200 | 260 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 120 | 150 |
| பயற்றங்காய் | 120 | 60 | 60 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 80 | 120 |
| கறிமிளகாய் | 180 | 140 | 150 |
| முருங்கைக்காய் | 700 | 600 | 500 |
| போஞ்சி | 160 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 30 | 70 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 250 | 140 | 240 |
| முள்ளங்கி | 100 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 20 | 40 |
| ஈரப்பலா | — | 80 | 120 |

# பூநகரி பள்ளிக்குடாவிற்கு பேருந்து சேவையை நடத்துங்கள்

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி பள்ளிக்குடாவிற்கு இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவையினை நடத்தும்படி அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பள்ளிக்குடாவில் இருந்து காலையில் கிளிநொச்சிக்குப் புறப்படும் தனியார் பேருந்து பிற்பகலிலேயே பள்ளிக்குடாவிற்குத் திரும்புகிறது.

பூநகரி மகாவித்தியாலயத்திற்குச் செல்லும் மாணவர்கள் பள்ளிக்குடாவிற்குத் திரும்புவதில் தாமதம் ஏற்படுகிறது.

அத்துடன் பள்ளிக்குடா மக்கள் பூநகரி பிரதேச வைத்திய சாலைக்கு சென்று வர முடியாத நிலைமையும் காணப்படுகிறது.

இந்நிலையில் கிளிநொச்சியில் இருந்து வருகை தரும் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து மக்கள் குடியிருப்பு நிறைந்த பள்ளிக்குடா கிராமத்திற்கு வருகை தருவதன் மூலம் போக்குவரத்து சிரமங்களில் இருந்து பள்ளிக்குடா மக்கள் விடுபட்டுக்கொள்ள முடியும்எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-4-350)

# சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்தக் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஐயன்கன்குளம் கிராமத்தில் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்துங்கள் என பொதுமக்கள் ஐயன்கன்குளம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

மதுபோதையில் நடமாடுவோர் வீதியில் வருபவர்களுடன் மோதல்களில் ஈடுபடுவதாகவும் இதனால் வீதியில் செல்பவர்கள் அச்சத்துடன் பயணிப்பதாவும் பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

ஐயன்கன்குளம் கிராமத்தில் தற்போது அடிக்கடி குழு மோதல்களை இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் ரவுடிக் குழுக்களின் தொல்லைகள் தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலகத்தின் அதிகாரிகளுக்கும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக ஐயன்கன்குளம் பொலிஸ் நிலையத்தில் தகவ ல்களைத் தெரிவிக்கும்படியும்பொது மக்களுக்கு பொலிஸார் அறிவித்துள்ளனர்.(5-6-350)

# துவரங்குளத்தை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## விவசாயிகள் கோரிக்கை

(அக்கராயன்)

**முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் துவரங்குளத்தினை வனவளத் திணைக்களத்திடம் இருந்து விடுவித்துத் தருமாறு அப்பகுதி விவசாயிகள் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

மாந்தை கிழக்கின் வன்னிவிளாங்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் துவரங்குளம் அமைந்துள்ளது.

சுமார் 120 ஏக்கர் வரையான நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசனம் செய்யக் கூடிய இக்குளத்தின் கீழ் 60 வயல் நில அனுமதிப் பத்திரங்கள் உள்ள விவசாயிகள் உள்ளனர்.

பாண்டியன்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தின் கீழ் இக்குளம் உள்ளது. 2014 ஆம் ஆண்டில் இக்குளம் புனரமைக்கப்பட்ட நிலையில் தற்போது வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இக்குளம் இருப்பதன் காரணமாக இக்குளத்தின் கீழ் விவசாய முயற்சிகளை மேற்கொள்ள முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

குறித்த குளத்தினை விடுவிக்கக் கோரி பல ஆண்டுகளாக மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் கோரப்பட்டு வந்தாலும் இதுவரை குளம் விடுவிக்கப்படவில்லை.

கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற வவுனிக்குளம் சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்திலும் இக்குளம் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் குளத்தினை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி மேலதிக மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

துவரங்குளத்தினை விடுவிப்பதற்கு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-350)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2293

**லக்சன்**

தன்னை "சிங்கிள்" என்று சொல்லி கொண்டு நடந்தவனை...



காலம் அவனை "அங்கிள்" என்று அழைக்க வைத்து விட்டது...

**கலை**

சம்சாரத்தை ரெண்டு நாளாக காணோம்... கவலைப்படாதீங்க. தேடிப் பிடிச்சுத் தாரோம்...



நல்ல சம்சாரமா தேடிப் பிடிச்சு தாங்க சேர்...

**சாருகேஷ்**

வளர்ந்த பின் ஆங்கில ஆசிரியரை விட நன்றாக ஆங்கிலம் பேசுகிறோம்...



ஆனால் தமிழ் ஆசிரியரை விட நன்றாக தமிழ் பேச முடிவதில்லை...!

**சுபர்ணா**



பெண்களுடைய தைரியத்திற்கு ஆண்கள் "அகராதி"யில் திமிர் எனப் பெயருண்டு...!

**பார்வதி**

ஆன்டி, அம்மா ஒரு கப் சர்க்கரை கேட்டாங்க... தர்ரேன் குட்டி, வேற என்ன சொன்னாங்க?



அந்த கிறுக்கி தரலேன்னா எதிர்வீட்டு சிறுக்கிகிட்ட கேளுன்னாங்க...

**துர்க்கை**

நம்ம டீச்சருக்கு என்ன ஆச்சு? ஏன் கேக்கறே...



திருக்குறளை அவங்களே போர்டுலே எழுதிட்டு இதை எழுதினது யார்? என்று கேட்குறாங்க...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது. அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.
~ மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உண்மைகள் ஒருபோதும் உறங்காதென்பது பொன்சேகாவின் உரையில் இருந்து தெரிகிறது

இப்பிரபஞ்சத்தின் படைப்புப் பற்றிய விளக்கம் ஆன்மிகத்தினூடாக ஏற்பட வேண்டும்.

அப்போதுதான் தெய்வீகத்தன்மை பொருந்திய இப்பிரபஞ்சத்தின் ஒழுங்கமைப்பை உணர்ந்து கொள்ள முடியும்.

ஆக, இவ்வையகத்தின் வாழ்வு என்பது அன்பெனும் ஊற்றினூடு அனைத்து உயிர்களையும் தன்னுயிர் போல் கருதுகின்ற பக்குவத்தை அடைதலாகும்.

இதனையே ஒவ்வொரு சமயங்களும் போதிக்கின்றன.

எனினும் பாழ்பட்ட மனிதன் என்னுடைய சமயம் உன்னுடைய சமயம் என்று தர்க்கம் புரியத் தலைப்பட்டதால், சமயத்தின் பேரால் சதித் திட்டங்கள் தீட்டுகின்ற கயமைத்தனங்கள் மலிந்துவிட்டன.

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என இறைவனை வழிபட வேண்டிய மனிதன்; கடவுளிலேயே பேதமை காட்டி கூட்டம் போட்டு பிற சமயக் கடவுட் கோட்பாடுகளைத் தூற்றுகின்ற அளவில் சமயங்கள் வியாபாரத் துறைகளாகிப் போயின.

என்ன செய்வது. இம்மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டிய மனிதன் தன் வாழ்வுக்குக் குந்தகம் விளைவிக்கத் துணிந்து விட்டபின்பு, அதனைத் தடுப்பது முடியாத காரியமே.

எதுஎவ்வாறாயினும் உண்மைகள் ஒரு போதும் உறங்காதென்பது உண்மை.

அந்த உண்மைகள் கால அசைவினால் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும் என்பது தான், தனு கரண புவன போகத்தைப் படைத்தருளிய இறைவனின் திருவருளாகும்.

ஆம், 2009ஆம் ஆண்டு நடந்த வன்னிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். காணாமல் ஆக்கப்பட்டனர்.

இன்றுவரை அந்த உறவுகளைத் தேடிக் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கின்றவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

நீதியை மறைப்பதனூடாக குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பித்துக் கொள்ள சம்பந்தப்பட்ட அதிகார வர்க்கம் பெரு முயற்சி செய்கிறது.

ஆனாலும் உண்மைகள் உறங்காது என்ற கருத்தையே மீளவும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

ஆம், மிருசுவிலில் எட்டுப் பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட இராணுவத்தினருக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தமை முற்றிலும் தவறு.

கொலை என்றால் அது கொலைதான். யார் செய்தாலும் அது கொலைதான் என்று இலங்கைப் பாராளுமன்றத்தில் முன்னாள் இராணுவத் தளபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா கூறியிருப்பதானது, ஓர் உண்மையின் வெளிப்பாடு என்பதை எவரும் நிராகரிக்க முடியாது.

இதனையே இப்பிரபஞ்சத்தை இயக்குவோன் செய்து நிற்கின்றான். உண்மைகளை அவன் ஒருபோதும் மறைப்பதில்லை.

# அரச வங்கி முறைமை வலுவாக பராமரிக்கப்பட வேண்டும்

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

அரச வங்கிமுறைமை வலுவாக பராமரிக்கப்பட வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று பாராளுமன்ற வளாகத்திலுள்ள பிரதமர் அலுவலத்தில் வைத்து குறிப்பிட்டார்.

பிரகதி வங்கி ஊழியர்கள் சங்கத்தின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற விரிவான கலந்துரையாடலொன்றின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது நிலவும் சவால் மிகுந்த சூழ்நிலைக்கு மத்தியில் அரச வங்கி முறையை வலுவாக பராமரித்தல் மற்றும் ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு இச்சந்திப்பு இடம்பெற்றது.

1996ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தப்பட்ட மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஊழியர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு, 2014ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக இருந்த காலப் பகுதியில் மீண்டும் பெற்றுக் கொடுத்தமை தொடர்பில் பிரகதி வங்கி ஊழியர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் இதன்போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு நன்றி பாராட்டினர்.

ஓய்வூதிய கொடுப்பனவு தொடர்பில் தொடர்ந்து நிலவும் பிரச்சினைகளை தீர்ப்பது குறித்தும் இதன்போது பிரதமரின் கவனம் செலுத்தப்பட்டது. நிதி அமைச்சர் என்ற ரீதியில் அரச வங்கிகளில் தற்போது நிலவும் பிரச்சினைகளை தீர்க்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாகவும் இதன்போது பிரதமர் சுட்டிக்காட்டினார். (ம-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** மருத்துவமனை வீதி, கச்சேரி நல்லூர் வீதிச் சந்தி, முலவை, பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் மின்சார சபை, ஆளுநர் விடுதி, யாழ். மாவட்ட செயலகம், துளசி மஹால், யு.எஸ்.விடுதி, அம்மன் வீதி கந்தர்மடம், ஆரிய குளம்- பருத்தித்துறை வீதி, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, பிஸா ஹட் மற்றும் ஐபிசி தமிழ், ஆனைப்பந்தி, சிவராஜா அவென்யூ, பலாலி வீதி, யாழ். மருத்துவமனை பலாலி வீதி, பி.சி.சி.ஏ. எஸ். கல்லூரி, பலாலி வீதி சிவன் அம்மன் வீதி சந்தி, அவுனோர் (பிவிரி) லிமிடெட், தம்றோ, ஐபிசி தமிழ், நொதேர்ன் மருத்துவமனை, சூரிய உதயம் (வீனஸ் வைத்திய சாலை), கொமர்ஷல் வங்கி பலாலி வீதி, பனிக்கர்லேன் சந்தி, திருநெல்வேலிசந்தை, வெளிவாரி பட்டப்படிப் புகள் நிலையம், திண்ணை விடுதி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** 4 ஆவது மைல் கல் பூநகரி, அரசபுரம், ஞானிமடம், கௌதாரி முனை, காஞ்சிபுரம், கறுக்காய்த்தீவு, கொல்லக்குறிச்சி தம்பிராய், குஞ்சுப் பரந்தன், முட்கொம்பன் சந்தி, முட்கொம்பன், நல்லூர் பூநகரி, நேரடம்பன், நெற்பிளவு, ஓவசியர் கடைச்சந்தி, பள்ளிக்குடா, பள்ளிக்குடா சுனாமித்திட்டம், பரமங்கிராய், பரமன்கிராய், பரந்தன் நகரம், செம்மண் குன்று, சின்னபல்வராயன் கட்டு, தம்பிராய், தரணிக்குடியிருப்பு, வாடியடி பூநகரி, வெட்டுக் காடு (கௌதாரிமுனை) வீரையடி, விநாசியோடை (கௌதாரிமுனை), 66 ஆம் பிரிவு இராணுவ முகாம் பூநகரி, அரசபுரம் இராணுவமுகாம், செல்லையாதீவு பிரதேச செயலகம், பூநகரி, பரந்தன் தொலைத்தொடர்பு நிலையம், 66 ஆம் பிரிவு இராணுவப் பயிற்சி பள்ளி அரசபுரம் ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும்.

# பொதுச் சுகாதார சட்டமூலம் சுமந்திரன் எம்.பியால் சபையில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

அவசரகால பொது சுகாதார நிலைமை ஒன்றைப் பிரகடனப்படுத்தல் தொடர்பான, தனிநபர் சட்டமூலம் ஒன்றை, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சபையில் முன்வைத்துள்ளார்.

அவசரகால பொதுச் சுகாதார நிலைமை ஒன்றைப் பிரகடனப்படுத்தல், பொதுமக்கள் சுகாதாரம் தொடர்பாக அவதானம் செலுத்துவதற்கான விசேட செயன்முறைகளை அங்கீகரித்தல் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான விடயங்களை வழங்குதல் என்ற தலைப்பில் இந்த சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்தின் 2ஆம் பிரிவின்கீழ், அவசரகால பொது சுகாதார நிலைமையொன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில், அவசரகால பொதுச் சுகாதார சபை எனும் நிறுவனம் ஒன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தகைய சபையின் தலைவராக ஜனாதிபதி செயற்பட வேண்டும் என்பதுடன், உப தலைவராக பிரதமர் செயற்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சுகாதாரத் துறை உள்ளிட்ட மேலும் சில துறைகளின் அமைச்சர்கள் அதில் அங்கம் வகிக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## வாழ்வில் உயர வேண்டுமா?

❖ உண்மை அல்லாதவற்றில் மிகவும் எச்சரிக்கையாக இருங்கள். உண்மை மீது பிடிப்புள்ளவர்களாக இருங்கள். உண்மை நிச்சயம் வெற்றி பெறும்.

❖ உண்மையையும், அன்பையும், தூய உள்ளத்தையும் எதுவும் எதிர்த்து நிற்க முடியாது. உண்மையானவர்களாக இருந்தால் யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை.

❖ நீ எந்த அளவுக்கு உயர்ந்தவனாக வேண்டுமென நினைக்கிறாயோ, அந்த அளவுக்கு, கடுமையான சோதனைகளைக் கடந்து செல்ல உன்னைத் தயார் செய்து கொள்.

❖ வாழ்க்கையில் அனைத்து தீமைகளையும் எதிர்த்து போரிடு. வெளியில் நடப்பதை மட்டுமல்ல! உனக்குள் ஏற்படும் தீமைகளோடும் போரிட்டுக் கொண்டே இரு.

❖ உயர்ந்த லட்சியம், தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகியவற்றுடன், நேர்மையும் மனிதனுக்கு அவசியம். நேர் வழியிலேயே முன்னேற வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத ராசி பலன்கள்

## 14.04.2021 - 14.05.2021



கும்ப இராசி வாசகர்களே!

பிலவ வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி பகவான் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். ஏழரைச் சனி தொடங்கிவிட்டாலும், இம் மாதம் உங்கள் இராசியிலேயே தன - லாபாதிபதியான குரு பகவான் சஞ்சரிப்பதால் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும்.

**கூட்டுக்கிரக யோகம்**

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 3 ஆம் இடமான சகாய ஸ்தானத்தில், சூரியன், புதன், சுக்கிரன், சந்திரன் ஆகிய நான்கு கிரகங்களும் சேர்ந்து சஞ்சரிக்கின்றன. 6 ஆம் இடத்திற்கு அதிபதி சந்திரனும், அஷ்டமாதிபதி புதனும் இணைந்திருப்பதால் 'விபரீத ராஜ யோகம்' செயல்படும். மேலும் புத ஆதித்ய யோகம், புத சுக்கிர யோகம் இருக்கின்றது. புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சு கைகூடும். விரயச் சனியால் செலவுகள் வந்தாலும், அதற்கு ஏற்ற வரவும் கிடைக்கும்.

**செவ்வாய் - சனி பார்வை**

மாதத் தொடக்கத்தில் செவ்வாயின் பார்வை, விரய ஸ்தானத்தில் இருக்கும் சனி மீது பதிகின்றது. பொதுவாக செவ்வாய் - சனி பார்வை அவ்வளவு நல்லதல்ல. உடன்பிறப்புகள் வழியே சில பிரச்சினைகள் ஏற்படும். தொழில் கூட்டாளிகள் உங்களை விட்டு விலகுவர். மனப்போராட்டங்கள் அதிகரிக்கும். ஆரோக்கியத் தொல்லையும் உண்டு. எல்லாவற்றிற்கும் வடிகால் இறைவழிபாடு ஒன்றுதான்.

## பொருளாதார பற்றாக்குறை அகலும்

**ரிஷப புதன் சஞ்சாரம்**

ஏப்ரல் 28 ஆம் திகதி, ரிஷப இராசிக்குப் புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு பஞ்சம - அஷ்டமாதிபதியான புதன், 4 ஆம் இடத்திற்கு வரும் பொழுது இடம், பூமியால் ஆதாயம் உண்டு. இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். பூர்வீக சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொள்ள எடுத்த முயற்சியில் பலன் கிடைக்கும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர். வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து உத்தியோகம் சம்பந்தமான அழைப்புகள் வரலாம். அலுவலகப் பணியில் இருந்த தாமதங்கள் அகலும்.




**ரிஷப - சுக்கிரன் சஞ்சாரம்**

மே 8 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். இனிய சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வரலாம். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டு. தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

**சனியின் வக்கிர காலம்**

மே 12 ஆம் திகதி முதல், மகர இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்கிரம் பெறுகின்றார். அது அவ்வளவு நல்லதல்ல. உங்கள் இராசிநாதன் சனி வக்கிரம் பெறும்பொழுது, ஆரோக்கிய குறைபாடுகள் ஏற்படும். மனக்குழப்பம் உண்டு. தீயவர்களின் நட்பால், திடீர் விரயங்களைச் சந்திக்க நேரிடும். விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டிய காலம் இது. 'கல்யாணத் திகதி குறித்தும், அதை நடத்த முடியவில்லையே' என்ற கவலை மேலோங்கும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் விரயச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், வரவைக் காட்டிலும் செலவு கூடும். வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் உறுதியாகலாம். கணவன் - மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும்.

பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெறும். உறவுகள் கேட்ட உதவிகளைச் செய்வர். பணிபுரியும் இடத்தில் பாராட்டும், புகழும் அடைவீர்கள்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



மீன இராசி வாசகர்களே!

பிலவ வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அதே நேரத்தில் லாபாதிபதி சனி லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே வரவு திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் கூடும். சனியின் பார்வை இராசியில் பதிவதால் சில காரியங்கள் மெதுவாகவே நடைபெறும்.

## நன்மைகள் அதிகம் நடைபெறும்

**கூட்டுக்கிரக யோகம்**

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 2 ஆம் இடமான தன ஸ்தானத்தில், சந்திரன், புதன், சூரியன், சுக்கிரன் ஆகிய கிரகங்கள் இணைந்திருக்கின்றன. எனவே உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு மேலிடத்து நிர்ப்பந்தம் இருக்கும். புத சுக்கிர யோகம், புத ஆதித்ய யோகம் இருப்பதால் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய வாய்ப்புகள் வந்து சேரும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள்.

**செவ்வாய் - சனி பார்வை**

மாதத் தொடக்கத்தில் செவ்வாயின் பார்வை, லாப ஸ்தானத்தில் உள்ள சனியின் மீது பதிகின்றது. பொதுவாக செவ்வாய் - சனி இரண்டும் பகை கிரகம் என்பார்கள். அவை பார்க்கும் காலங்களில் போராட்டங்கள் அதிகரிக்கும். திட்டங்கள் நிறைவேறாமல் போகலாம். ஆற்றல்மிக்கவர்கள் அருகில் இருந்தாலும், அவர்களால் உங்களுக்கு உதவ முடியாது. மாற்றங்கள் திருப்தி தராது. மனதில் நினைத்ததை செய்ய இயலாது. பத்திரங்களிலோ, அலுவலக விண்ணப்பங்களிலோ கையெழுத்திடும் பொழுது படித்துப் பார்த்து கையெழுத்திடுங்கள்.

**ரிஷப - புதன் சஞ்சாரம்**

ஏப்ரல் 28 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான [illegible] னத்தில் சஞ்சரிக்கும் பொழுது [illegible] முன்னேற்றம் திருப்திகரமாக இருக்கும். கொடுக்கல் - வாங்கல்களில் இலாபம் கிடைக்கும். உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும். சமுதாயப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். சுப காரியங்கள் திட்டமிட்டபடி நடைபெறும். சொந்தவீடு வாங்கும் திட்டம் நிறைவேறும். மனத்தெளிவோடு செயற்படுவீர்கள்.




**ரிஷப - சுக்கிரன் சஞ்சாரம்**

மே 8 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிநாதன் குருவிற்கு சுக்கிரன் பகை கிரகமாவார். எனவே அவர் மூன்றாம் இடத்திற்கு வரும் இந்த நேரத்தில் முன்னேற்றப் பாதையில் இடையூறு வரலாம். சகோதரர்கள் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து செல்லலாம். தொழிலில் பிறரை நம்பி கொடுத்த தொகை வராமல் போகலாம். [illegible] கொடுக்க வேண் [illegible] செய்யாத குற்றத்திற்கு ஆளாக நேரிடும்.

**சனியின் வக்கிர காலம்**

மே 12 ஆம் திகதி முதல், மகர இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 11, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. லாபாதிபதியான சனி வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. ஊதிய உயர்வு, உத்தியோக உயர்வு தாமதமாகும். ஆபரணங்களை அடகு வைக்கும் சூழ்நிலை உண்டு. இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமானை வழிபட்டு வாருங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் சனியின் பார்வை இராசியில் பதிவதால், உடல்நலக் குறைபாடுகள் அதிகரிக்கும். மனக் குழப்பம் உண்டாவதால், மற்றவர்களின் ஆலோசனைகளை கேட்க முன்வருவீர்கள். கணவன் - மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி கிடைக்கும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகளைச் சமாளிப்பீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றம், இலாகா மாற்றம் ஏற்படும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில்...

சாலை ஆய்வுகூடம் மற்றும் பல்கலைக் கழக மருத்துவ பீட ஆய்வுகூடம் என்பவற்றில் 636 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 12 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் 3 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நால்வருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

கைதடி அரச திணைக்களம் ஒன்றின் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவர் நேற்று முன்தினம் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டார்.

அவரது குடும்ப உறுப்பினர்கள் நால்வருக்கு தொற்றுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்கும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்கும் தொற்றுஉள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது என்றும் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33)

## இலங்கையில்...

வர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இதுவரையில் இலங்கையில் 99,653 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
















இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 634ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## குடும்பஸ்தரை...

அவரிடம் இருந்த இரண்டரை பவுண் தங்கச் சங்கிலியை கொள்ளையிட்டுச் சென்றுள்ள்னர்.

நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கரணவாய் பகுதியைச் சேர்ந்த மேற்படி குடும்பஸ்தர் மட்டுவில் பகுதியில் உள்ள ஒரு ஆலயத்துக்கு சென்று விட்டு அங்கிருந்து வடமராட்சி நோக்கி வந்து கொண்டிருந்தபோது வடமராட்சியில் இருந்து தென்மராட்சியை நோக்கி சென்று கொண்டிருந்த பல்சர் மோட்டார் சைக்கிளில் இலக்கத்தை மறைத்த நிலையில் வந்தவர்கள் வாகன உடைமைகள் பரிசீலிப்பது போன்று பாசாங்கு செய்துவிட்டு அவரின் கழுத்தில் இருந்த இரண்டரை பவுண்தங்கச்சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-3,60)

## மூன்று வாரங்...

கோவிட் - 19 தொற்று கட்டுப்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே கூறியுள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளை மூன்று வாரங்களுக்கு மூடுவது தொடர்பான யோசனை குறித்து ஆராயப்படுவதாக பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்திற்கு குறித்த விடயம் கொண்டு செல்லப்படும் என அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையில், கொரோனா தொற்று அதிகரித்துள்ளமையால் பாடசாலைகளை மூடுமாறு இலங்கை அதிபர்கள் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பத் தயங்குகிறார்கள் என்றும் அந்தச் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. (ம-3)

## முள்ளிவாய்க்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி நேற்றுக் காலை 7.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

பாதுகாப்பு தரப்பினரும் இதற்கு நெருக்கடி கொடுக்கவில்லை. அசம்பாவிதங்களை தடுக்க முன்னெச்சரிக்கையாக, பல்கலைகழக வாயிலில் 2 பொலிஸார் மட்டும் கடமையில் இருந்தனர். (ம-3,18,33)

## அத்தியாவசிய...

சுற்றறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

இந்தச் சுற்றறிக்கை வரும் மே 31ஆம் திகதிவரை நடைமுறையில் இருக்கும்.

அதன்படி ஒவ்வொரு குடும்பத்திலும் இருவர் மட்டுமே அத்தியாவசிய தேவைகளுக்காக வெளியில்செல்வதற்கும்வேலைக்குச் செல்வதற்கும் அனுமதிக்கப்படுவர்.

பேருந்துகள் மற்றும் தொடருந்துகளில் ஆசனாங்களுக்கு அமைய பயணிகள் அனுமதிக்கப்படவேண்டும்.

கார் மற்றும் முச்சக்கரவண்டிகளில் இரண்டு பயணிகள் மட்டுமே பயணிக்க வேண்டும்.

அத்தியாவசிய சேவைகளில் மட்டுப்படுத்தப்பட்ட பணியாளர்களே அனுமதிக்கப்பட வேண்டும். ஏனைய பணியாளர்கள் வீட்டிலிருந்து பணியாற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.

திருமணம் உள்ளிட்ட நிகழ்வு மண்டபங்களில் ஆசனாங்களுக்கு அமைய 50 சதவீதமானோர் அல்லது ஆகக்கூடியது 50 பேர் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும்.

நிகழ்வுகள் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியின் அனுமதியுடன் அவரது கண்காணிப்பின் கீழ் நடத்தப்பட வேண்டும்.

வர்த்தக நிலையங்களுக்குள் ஒன்றரை மீற்றர் இடைவெளியில் வாடிக்கையாளர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

சந்தைகளில் கொள்ளளவில் 50 சதவீத வியாபார நடவடிக்கைகள் இடம்பெற அனுமதிக்கப்படவேண்டும்.

பாடசாலைகளில் வகுப்பறையில் 50 சதவீத மாணவர்களுக்கு அனுமதி.

இறுதிச் சடங்குகளில் ஆகக் கூடியது 25 பேருக்கு மட்டுமே அனுமதியளிக்கப்பட வேண்டும். (ம-3)

## இலங்கையில் காற்...

தாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்பு மூலம் மட்டுமன்றி, தற்போது காற்றில் புதிய வகை கொரோனா வைரஸ் பரவுகிறது எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அசேல குணவர்தன, தற்போது இலங்கையில் பரவும் கொரோனா வைரஸின் புதிய வகை முதியவர்களை மட்டுமன்றி, இளையோரையும் அதிகம் பாதிப்பது கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இளையவர்களிடையே வைரஸ் வேகமாகப் பரவும் நிலையில் இள வயதினருக்கு ரஷ்யாவின் 'ஸ்பூட்னிக் வி' தடுப்பூசியைப் போட நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

இளம் வயதினருக்கு 'ஸ்பூட்னிக் வி தடுப்பூசிமற்றும் பைசர் தடுப்பூசிகளைப் பயன்படுத்த முடியும் என சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

'ஸ்பூட்னிக் வி தடுப்பூசி மற்றும் பைசர் தடுப்பூசி பெற்றுக்கொள்வது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் தற்போது இலங்கை ஈடுபட்டு வருகிறது.

இதேவேளை, கொரோனா வைரஸின் புதிய பிறழ்வுகள் இலங்கைக்குள் பரவி வருகின்றன. அந்த பிறழ்வுகள் எந்த வகையைச் சேர்ந்தவை? என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாக நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு அறிவியல் துறை பேராசிரியர் நீலிகா மலாவிஜ் தெரிவித்துள்ளார்.

புதிய வகை வைரஸ் மிக வேகமாகப் பரவக் கூடியது. முன்னர் பரவிய வைரஸ் ஒருவரிடம் இருந்து ஒன்று அல்லது இரண்டு நபர்களுக்குத் தொற்றக் கூடியது. ஆனால் தற்போது பரவும் புதிய வைரஸ் 5 முதல் 6 பேர் வரையில் தொற்றை ஏற்படுத்தும் எனவும் அவர் கூறினார்.

புதிய வகை வைரஸ் சிறிய நீர்த்துளிகள் ஊடாக காற்றில் பரவுகின்றது. இதனால் நேரடித் தொடர்பு ஊடாக மட்டுமன்றி நோயாளி இருக்கும் இடத்தில் உள்ளவர்களுக்கு இந்த வைரஸ் பரவுகிறது எனவும் பேராசிரியர் நீலிகா மலாவிஜ் விளக்கமளித்தார். (ம-3)

## அடையாள...

டுள்ளார்.

42 வயதுடைய நபரொருவரே நேற்று முன்தினம் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் விடுதலைப் புலி அமைப்பின் உயிரிழந்த உறுப்பினர்களின் பெயரில் அடையாள அட்டை மற்றும் போலியான கடவுச்சீட்டுக்களை தயாரித்து நபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாக விசாரணைகளில் வெளிவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3,299)

## பாரதத்தில்...

கின்ற நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை ஒரேநாளில் 2 இலட்சத்து 98 ஆயிரத்து 540 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியே 65 இலட்சத்து 55 ஆயிரத்து 849 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## நாடு தற்போது...

கட்டுப்பாடு மற்றும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு என சட்ட விதிமுறைகள் இன்றி மக்களின் ஒத்துழைப்புடன் தற்போதுள்ள நிலைமையைக் கட்டுப்படுத்தவே எதிர்பார்ப்பதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். (ம-3)
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Software Engineer, QA, UI/UX

கொழும்பில் சில பிரபல மென்பொருள் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுக்கொடுப்பதுடன், அனுபவமற்றவர்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான 3 மாத பயிற்சியும் வழங்கப்படும். (6689)

DEWMAS,
51, Amman Road,
Nallur.

074 138 3368
021 315 2500
dewmasweb.com

## Vacancy

Programmer, Web Developer, Receptionist, Graphics Designer, Data Entry Operator (Female), Clerk(Female) (6689)

**074 138 3368**

dewmasweb.com

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், உரும்பிராய், கோப்பாய் வீதியில் மெயின் றோட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
(கோப்பாய் வீதி கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில்.) (6693)

தொடர்பு கொள்ளும் நேரம் : காலை 9.00 மணி தொடக்கம் 5.30 மணி வரை

**077 288 0152, 077 468 3354, 077 203 6402**

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

### மகாசபைக் கூட்ட அறிவித்தல்

அனைத்து மகாசபை உறுப்பினர்கட்கும்!

மகாசபைத் தலைவரின் தலைமையில் (24.04.2021) இன்று கூட்டம் நடைபெறும் என்பதுடன் அறங்காவலர் சபையின் விசேட மகாசபை கூட்ட யாப்புடைமையைத் தெளிவாக்குவதும், அதனைத் தொடர்ந்து அதிமுக்கிய கலந்துரையாடலும் இடம்பெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

- நன்றி - (C-2026)

திரு.க.சண்முகவசீகரன்
தலைவர்,
மகாசபை.

திரு.ச. இராகவானந்தன்
செயலாளர்,
மகாசபை.

## வீடு விற்பனைக்கு உண்டு

31/3, டேவிற் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு. (6688)

**076 106 1407**
**077 526 1407**
**021 222 1270**

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org

(6648)

**021 222 8093** புதிய விலாசம் No. 17, Kandy Road, Jaffna.

## வேலை வாய்ப்பு

ஆர்ப்பிக்கோ காப்புறுதி நிறுவனத்திற்கு அனுபவம் வாய்ந்த Under writer உடனடியாகத் தேவைப்படுகின்றார்.

தகைமை
- G.C.E - A/L.
- தமிழ், ஆங்கிலம், சிங்களம் தெரிந்தவர்கள்.

(யாழ். நகரில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.) (6686)

**077 192 0206**
**077 772 7721**

யாழ். கிளை
இல.86, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை கிழக்கு, ஐயனார் வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)
(தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து 600 மீற்றர் தூரம்)
பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
(தரகர் தேவையில்லை) பரப்பு 5 இலட்சம். (6672)

**077 814 7389**
**077 614 7333**

# கோவிட் தொடர்பாக இறுக்கமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்

(கொழும்பு)

நாட்டில் கோவிட்-19 தொற்று அதிகரித்துவரும் நிலையில் அதனை கட்டுப்படுத்துவதற்காக இறுக்கமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று இலங்கை பொலிஸ் பேச்சாளரும், பதில் பொலிஸ்மா அதிபருமான அஜித்ரோகண தெரிவித்தார்.

வவுனியாவிற்கு நேற்று விஜயம் செய்த அவர் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களிற்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் .,

நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்துச் செல்கின்றது. அதனை கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் பொலிஸாருக்கு நாம் பல்வேறு உத்தரவுகளை வழங்கியிருக்கின்றோம்.

கொரோனா தொற்றினால் தனிமைப் படுத்தப்படும் குடும்பங்கள் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்படும். அத்துடன் பொதுமக்களும் அநாவசியமாக வெளியில் திரிவதையும் ஒன்றுகூடுவதையும் மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அத்துடன் நாட்டில் முடக்கநிலையை ஏற்படுத்துவது தொடர்பாக சுகாதாரத் துறை சார்ந்த அதிகாரிகளே தீர்மானிப்பார்கள். அவர்களது பரிந்துரைகளின் அடிப்படையிலேயே ஏனைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார். (ம-03)

## தேவை

யாழ். திருநெல்வேலி பலாலி வீதியிலுள்ள எமது கட்டடத்திற்கு
1. வயறிங், பிளம்பிங் வேலையாட்கள்.
2. தோட்ட வேலையில் ஆர்வமுடையவர்கள். வீட்டுத் தோட்டத்திற்கு தேவை. (6692)

☎ - **077 105 6694**

## ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L,A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிவர்களுக்குமான English Spoken with grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு **076 119 9298** M.SUREN (6660)

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை பத்மநாதன்

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர் - ஏழாலை)



அன்னை மடியில் : 20.04.1957
ஆண்டவன் அடியில் : 18.04.2021

தாவடியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை பத்மநாதன் அவர்கள் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - சொர்ணரத்தினம் தம்பதியரின் இளைய புதல்வரும் காலஞ்சென்ற புவனேந்திரன் - லீலாவதி தம்பதியரின் அன்பு மருமகனும் றோகினியின் (இளைப்பாறிய ஆசிரியை- இணுவில் மத்திய கல்லூரி ) அன்புக் கணவரும் சுரேகா, சஞ்ஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற யோகநாதன், சபாநாதன், பவானி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விமலா, நிமலா ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் யோகானந்தா, வசந்தி, நிறஞ்சன், மதனன், சுகந்தி, ஜெயந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள வைற் ஹவுஸ் மலர்ச் சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இம்மாத இறுதியில் அவரது இல்லத்தில் எளிமையாக நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (6680)

தகவல்:-
மனைவி, மகன் (சஞ்ஜீவன் - மகன்) 076 551 5424
தாவடி.

## விற்பனைக்கு

Austin - 10, A- 40, VW கார், VW வான், Delica van, BMC லொறி, CD 185, 49cc, மோட்டார் சைக்கிள்களும், கைதடி கல்வயலில் 10 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு. (6681)

தொடர்பு **077 284 7850**

## அன்னா EXPRESS

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள் — லண்டன் 1000/= (C-2006)
070 3305500
077 888 9388

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-1000/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2004)

...6240 DHL

## உடனடி வேலை வாய்ப்பு



**V2 TRAVELS** விரைவு பொதிகள் சேவை (C-2005)

வாடிக்கையாளர் சேவை அலுவலர்

எமது அனைத்து கிளைகளிலும் வேலை செய்யக்கூடியவராகவும் அதிக நேரம் வேலை செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்

வயது :-35 வயதிற்குட்பட்டோர் (ஆண்கள் மட்டும்)
சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்
சம்பளம் - 25'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777068777
v2vacancies@gmail.com

## விற்பனைக்கு

நடமாடும் உணவகம்

**FOOD CART**

யாழ். மாநகர சபையினால் அங்கீகரிக்கப்பட்ட CLADING இனால் உருவாக்கப்பட்ட LED விளக்கினால் அலங்கரிக்கப்பட்ட நடமாடும் உணவகம் உடனடியாக விற்பனைக்கு உண்டு. (C-2028)

**077 736 0353**
**075 936 0370**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.